www.padippakam.com

மாணவர் - இளைஞர்

# முன்னோடி

13-4,5,6, & 14-1,2,3,4,5
மார்ச்-2000 ஜுன்-2001

நன்கொடை: ரு. 4.00



## இந்திய உழைக்கும் மக்களை நசுக்கும்

நிலவுடமையை தகர்த்திட
தரகுப் பெரு முதலாளியத்தை வீழ்த்திட
ஏகாதிபத்தியத்தை விரட்டிட

## பேரணி - பொதுக்கூட்டம், 31-05-2001 - கல்கத்தா

அணிதிரள்வோம் மக்கள் யுத்தப் பாதையில்!
அடைவோம் விடுதலையை!

படிப்பகம்

www.padippakam.com

# முன்னேறிச் செல்லும் பெரு நாட்டின் மக்கள் யுத்தம்...

ஏகாதிபத்தியங்களின் தலைமை நாயகனான அமெரிக்காவின் சுரண்டலுக்கு முடிவு கட்டும் வண்ணமாக, அமெரிக்காவிற்கு அருகிலேயே உள்ள தென் அமெரிக்க நாடான பெரு என்ற நாட்டில் மாவோயிஸ்டு புரட்சியாளர்களின் தலைமையில் கடந்த 20 ஆண்டுகளாக மக்கள் யுத்தமானது முன்னேறி வருகிறது.

மே 17, 1980அன்று பெரு நாட்டில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக மக்கள் யுத்தமானது தொடங்கப்பட்டது. அன்று முதல் எண்ணற்ற தியாகங்களைச் செய்து சுரண்டலற்ற ஒரு சமூகத்தைப் படைக்க உள்ளூர் அரசு மற்றும் அதன் எஜமானான அமெரிக்காவின் இராணுவ வெறியாட்டங்களையும் மீறி மக்களின் தீவிர பங்கேற்பால் அது முன்னேறி வருகிறது.

மிகக் கொடூரமான வறுமையில் சிக்கித் தவிக்கும் பெரு நாட்டின் மக்களுக்கு மக்கள் யுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை என நன்றாகவே உணர்ந்துள்ளனர்.

நாட்டின்அரசாங்க இராணுவத்தினர் 3 இலட்சம் பேருக்கு அமெரிக்காவின் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு மக்கள் மற்றும் புரட்சியாளர்களின் மீது அடக்குமுறையை ஏவினாலும் மக்கள் யுத்தத்தை அழிக்கமுடியவில்லை. பல்லாயிரம் மக்களும் புரட்சியாளர் களும் அவர்களின் உறவினர்களும் கொல்லப்பட்டும் பல கிராமங்கள் குண்டு வீசி பூண்டோடு அழிக்கப்பட்டும் எண்ணற்றோர் சிறையிலடைக்கப்பட்டும் மக்கள் யுத்தமானது வீறு கொண்டு எழுகிறது.

அனைத்திற்கும் மேலாக, 1992 –இல் பெரு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கொன்சாலோ மற்றும் இதர தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னும் 1999–இல் தோழர் பெலிசியானோ என்ற தலைவர் கைது செய்யப்பட்டாலும் மக்கள் யுத்தமானது அடங்க மறுக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே அதாவது 1995–இல் அமெரிக்கா தயாரித்துள்ள அறிக்கையில் பெரு நாட்டின் பரப்பளவில் 25–40% வரை மக்கள் யுத்தத்தை நடத்தும் மாவோயிஸ்டு புரட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது .

அண்மைக்காலத்தில் பெரு நாட்டில் நடைபெற்ற சிறைவாசிகளின் கிளர்ச்சிகளையும் புரட்சியாளர்கள் அரசாங்கத்திற்கு எதிராக தொடுத்த இராணுவ நடவடிக்கைகளையும் சிறிது பார்ப்போம்.

♠ தோழர் பெலிசியானோ கைது செய்யப்பட்ட பின் அரசாங்கமானது, 1999 அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் புரட்சியாளர்கள் மீது 'அழித்தொழிப்பு நடவடிக்கையை' (Operation Annihilation) ஐ ஏவியது. அந் நடவடிக்கையானது, ஜீனின் மற்றும் அயாகுச்சோ ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் விடுதலைப் படையினால் தோற்கடிக்கப்பட்டது.

♠ அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் பயணம் செய்த எம்–17 ஹெலிகாப்டர் ஒன்றை பெரு கம்யுனிஸ்ட் கட்சியின் கெரில்லாக்கள் தகர்த்தனர்.

அச்சம்பவத்தில் ஒரு கர்னலும் இதர மூன்று அதிகாரிகளும் இறந்தனர். பலர் காயமடைந்தனர். இறந்த கர்னலானவர் தோழர். பெலிசியானோவை கைது செய்ய மேற்கொள்ளப்பட்ட உளவு செயற்பாட்டிற்கு பொறுப்பாக இருந்தவர்.

புரட்சியாளர்கள் நவம்பர் 1999–இல் ஹீவாண்டா (Huanta) மாகாணத்தில் மேற்கொண்ட மற்றொரு தாக்குதலில் விஸ்காடன் (Vizcatan) பகுதியில் ஈன் (Ene) ஆற்றின் அருகே இராணுவத்தின் ஒரு கேப்டனும் எட்டு வீரர்களும் நீண்ட சண்டைக்குப் பின்னர் கடுமையாக காயமுற்றனர்.

மற்றொரு தாக்குதலிலும் அரசாங்கத்தின் ஹெலிகாப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

அடுத்து, கடந்த ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலை புறக்கணிக்கக் கோரி மக்களை ஒடுக்குகின்ற போலீஸ் துருப்புகள் நாடுதோறும் தாக்கப்பட்டன. பிப்ரவரி 2000–இல் யனமயோ சிறைவாசிகள் பெரு கம்யூனிஸ்ட் கட்சியால் வழிநடத்தப்பட்டு பல நாட்கள் சிறைச்சாலையை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர்.

பிப்ரவரி 7 அன்று நடந்த அவ்வெழுச்சியினை ஒட்டி அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் பெரு நாட்டின் பாட்டாளிகளுக்கும் மக்களுக்கும் சர்வதேச பாட்டாளிகளுக்கும் உலக மக்களுக்கும் புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதோடு தங்களின் இக்கிளர்ச்சியானது, அரசாங்கம் மற்றும் சிறை நிர்வாகத்திற்கும். எதிரானதோடு அரசாங்கத்துடன் சமரசம் செய்து கொள்கின்ற 'அமைதி ஒப்பந்தம், என்ற துரோகத்திற்கும் எதிரானது என்று குறிப்பிட்டனர்.

இங்ஙனம், இராணுவ தாக்குதல்கள், சிறை கிளர்ச்சிகள், மக்களை மீண்டும் மீண்டும் மக்கள் யுத்தத்தின் கீழ் அணிதிரட்டுதல் ஆகியவற்றின் மூலம் அரசு எந்திரத்திற்கு தோல்வியை கொடுத்துக் கொண்டு இருக்கிறது பெரு கம்யூனிஸ்ட் கட்சி.

மக்கள் கொரில்லா படையைக் கட்டியமைத்து கெரில்லா மண்டலங்கள் புடைசூழ தளப்பகுதிகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆயுதப் போராட்டமானது மூல உத்திரீதியான தற்காப்பு நிலையிலிருந்து **(STRATEGIC DEFENCE)** மூல உத்தி ரீதியான சமநிலையினை (STRATEGIC EQUILIBRIUM) அடைந்துள்ளது.

நாட்டின் பல நகரங்களிலும் தலைநகர் லிமாவிலும் அரசாங்க எந்திரத்தை ஸ்தம்பிக்க வைக்கின்ற அளவிற்கு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் போக்கு வளர்ந்து வருகிறது.

ஒளிரும் பாதை' என்றொரு பெயராலும் அழைக்கப்படும் பெரு கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆண்டு கால மக்கள் யுத்தமானது பெரு நாட்டின் உழைக்கும் மக்களுக்கு ஒரு ஒளிரும் பாதையாகவே இருந்து முன்னேறி வருகிறது.

**– இரவீந்தர்.**



படிப்பகம்

www.padippakam.com

போராட்டமே
வாழ்வின் விதி!



மாணவர் - இளைஞர்
முன்னோடி
முற்போக்கு மாணவர்
இளைஞர் இதழ்

13-4,5,6, & 14-1,2,3,4,5
மார்ச் 2000 - ஜுன் 2001

தனி இதழ் : 4.00
ஆண்டுசந்தா : 36.00

ஆசிரியர்
மற்றும்
வெளியிட்டாளர்

பாலன்
33/16, இராணி அண்ணாநகர்,
கே.கே.நகர், சென்னை-78.

# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிவுகள் - புதிய பொருளாதார கொள்கைக்கு எதிரான மக்களின் கோபமே!

ஒரு வழியாக, தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் திரு(ட்டு) விழா முடிந்து ஜெயலலிதாவும் முதலமைச்சராகிவிட்டார். நம்மை, நம் நாட்டை, நம் வளங்களை சூறையாட ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தரகுப் பெரு முதலாளிகளுக்கும் நிலவுடமை சக்திகளுக்கும் மீண்டும் ஒரு முறை ஜனநாயக வேடந்தரித்த சட்டரீதியான உத்தரவாதத்தை அளிப்பதற்கு நடத்தப்பட்டதே இத்தேர்தல். ஆயினும், கிடைக்கும் இந்த பெயரளவிலான ஜனநாயக (!) உரிமையில் (!) (சாதி, பணம், அதிகாரம் போன்ற வடிவங்களில் இடத்திற்கேற்றவாறு ஆங்காங்கே இந்த அற்ப உரிமையும் மறுக்கப்படுகிறது என்பது ஒரு புறம் இருக்கிறது) பங்கேற்ற மக்கள் கருணாநிதியின் ஐந்து ஆண்டு கால பொற்கால (?) ஆட்சிக்கு எதிராக வாக்களித்திருக்கின்றனர்.

சேஷன் காலந்தொட்டு தேர்தலையொட்டி விதிக்கப்படும் சில கட்டுப்பாடுகள் தேர்தலில் பங்கு பெற்ற கட்சிகளுக்கு இம்முறையும் விதிக்கப்பட்டன. அவற்றை அனைத்து கட்சிகளும் பல விதங்களில் மீறினாலும் அவற்றை தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளவில்லை. அவ்வாறே கண்டுகொண்டாலும் கண்துடைப்பிற்கு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடுகளை வாஜ்பாயும் கருணாநிதியும் வெளிப்படையாக விமர்சித்தனர். தேர்தல் முறை மீது போலியான நம்பிக்கையினை மக்களிடையே ஏற்படுத்தவே இந்த நாடகத்தை தேர்தல் ஆணையம் நடத்துகிறது. ஆனால், கிளைமாக்சில் நாடாளுமன்ற ஜனநாயகத்தை காப்பாற்ற முடியாமல் தேர்தல் ஆணையம் நிர்வாணமாக நிற்கின்றது.

கடந்த சில தேர்தல்களாகவே வாக்குப் பதிவு குறைந்து வருவதை போன்றே இம்முறையும் குறைவாகவே 58% வாக்குப் பதிவானது. தேர்தல் ஆணையத்தின் ஜனநாயக முகமூடிகளோ மக்கள் திரள் ஊடகங்களின் பிரச்சாரங்களோ எவ்வித தாக்கத்தையும் மக்களிடையே ஏற்படுத்தவில்லை. அத்துடன். வாக்களிப்பது ஜனநாயக உரிமை என்றும் அதுதான் இந்திய குடிமகனுக்கு அழகு என்று பலர் வாக்களிக்காததால்தான் கெட்ட வேட்பாளர்கள் வெற்றி பெற்று நாடு சீரழிகிறது என்றும் சில அறிவார்ந்த(?) கும்பல்களின் மண்டை பெருத்த மூளை வீங்கிய தான்தோன்றித்தனமான அறிவுரைகளை கணிசமான மக்கள் குப்பைத்தொட்டியில் வீசிவிட்டனர்.

தேர்தல் முடிவுகளோ கருத்துக்கணிப்புகளின் பின்னால் உள்ள வர்க்க நலன்களை அம்பலப்படுத்தின. தேர்தல் முடிவுகள் குறித்த மக்கள் திரள் ஊடகங்களின் விவாதங்களோ வழுக்கைத் தலையில் முடியினை தேடுவது போன்று இருக்கின்றன. அவையனைத்தும், ஒரு விஷயத்தை, அதாவது தேர்தல் முடிவுகளில் உள்ள மக்களின் உணர்வுகளை மூடி மறைக்கின்றன. அதற்கும் காரணம் - அவர்களின் வர்க்க நலன்களே.

கருணாநிதியின் 5 ஆண்டு கால சாதனை (?) ஆட்சிக்கு எதிராக மக்களின் பெரும்பான்மை வாக்குகள் அமைந்திருக்கின்றன என்பதே உண்மை. மாறாக, கூட்டணி கணக்குகளோ சாதி கணக்குகளோ அல்ல. ஆனால், அவற்றில் தான் கருணாநிதியின் தோல்விக்கான காரணங்களும் ஜெயலலிதாவின் வெற்றிக்கான காரணங்களும் தேடப்படுகின்றன.

அத்தகைய கணக்கு போட்டுத்தான் கூட்டணி அமைத்த கருணாநிதி மண்ணை கவ்வினார். அதே நேரத்தில் இம்முடிவுகள் ஜெயலலிதாவிற்கு ஆதரவானதல்ல. கருணாநிதிக்கு எதிரான எதிர்மறை வாக்குகள். மாறாக, ஜெயலலிதாவிற்கு ஆதரவான நேர்மறை வாக்குகள் அல்ல.

தலித் அமைப்புகளுடன் கூட்டணி அமைத்து தலித் வாக்குகளையும் இதர சாதி அமைப்பு/கட்சிகளுடன் கூட்டணி அமைத்து அச்சாதியினரின் வாக்குகளையும் பெற்று ஆட்சியில் மீண்டும் அமர்ந்திடமுடியும் என்று கருணாநிதி நம்பி ஏமாந்தார். கருணாநிதியின் சாதியவாத தேர்தல் கூட்டணி தோற்றுப்போனது.

மக்களிடையே சாதி உணர்வுகள் இருந்தாலும் தங்களை ஏமாற்றுகின்றவர் தங்களின் சாதியைச் சேர்ந்தோராக இருப்பினும் அவர்களை மக்கள் நம்பத் தயாரில்லை. என்பதைத்தான் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. மக்களை அவ்வாறு ஏமாற்ற முடியும் என்றெண்ணி திமுக கூட்டணியில் உள்ள தலித் அமைப்புகளும் இதர சாதி அமைப்புகளும் ஏமாந்தன. தேர்தல் முடிவுகள் சாதி வாக்கு வங்கி என்பதற்கு எதிராகவும் சாதிய அரசியல் என்பதற்கு எதிராகவும் அமைந்து உள்ளன.

அதே நேரத்தில், ஜெயலலிதாவின் அதிமுக கூட்டணி சாதி வாக்கு வங்கி என்பதை மையமாகக் கொண்டு செயற்படவில்லை என்று பொருளல்ல. கருணாநிதிக்கு எதிரான மக்களின் கோபம் ஜெயலலிதாவிற்கு சாதகமாக திரும்பியுள்ளது.

கடந்த 5 ஆண்டு கால கருணாநிதியின் ஆட்சியில் கோடிக்கணக்கான மக்கள் விலைவாசி உயர்வால் கடுமையாக கஷ்டப்பட்டனர். இலட்சக்கணக்கான தொழிற்சாலைகள் மூடப்பட்டன. வெளிநாட்டு முதலாளிகளுக்கு எண்ணற்ற சலுகைகள் வாரி வழங்கப்பட்டன. ஆலை மூடலாலும் விலைவாசி உயர்வாலும் வறுமையில் உழன்ற மக்கள் பட்டினி கிடந்தனர்; மாண்டனர். தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள், பெண்கள், தலித்துகள், மதச் சிறுபான்மையினர் என சமூகத்தின் அனைத்து தரப்பினரும் ஒடுக்கப்பட்டனர்.

இத்தகைய ஒரு சூழலில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில், தொழிலாளர்கள் - விவசாயிகள் - தலித் - மதச் சிறுபான்மையினர் விரோத கருணாநிதியின் ஆட்சிக்கு எதிராக மக்கள் வாக்களித்து உள்ளனர்.

தலித்துகளை ஒடுக்கிய கருணாநிதியுடன் கூட்டு சேர்ந்த விடுதலைச்சிறுத்தைகளுக்கும் புதிய தமிழகத்திற்கும் நல்ல பரிசு கிடைத்தது. முஸ்லிம் விரோத - இந்து மதவெறி பிடித்த பாஜகவுடன் கூட்டணி அமைத்துள்ள திமுகவுக்கு வாக்களிக்க கூறிய தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழகத்தை முஸ்லிம்கள் புறக்கணித்து திமுக கூட்டணிக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

இங்ஙனம், தேர்தல் முடிவுகள் இவ்வாறிருக்க, ஜெயலலிதாவின் ஆட்சியோ கருணாநிதியின் ஆட்சியை விட மோசமாகத்தான் இருக்கப்போகிறது. அதில் ஒன்றும் மாற்றம் இல்லை.

ஏனெனில், உழைக்கும் மக்களுக்கான சமுதாயம் படைக்கப்படும் வரை, இது தொடரத்தான் செய்யும். கருணாநிதிக்கும் ஜெயலலிதாவிற்கும் மாறி மாறி வாக்களிப்பதால் இது நடைபெறாது.

நாடாளுமன்ற தேர்தல் முறையில் நமக்கு விடிவு கிடைக்காது. நக்சல்பாரி பாதையில் ஆந்திரா, பிகார், தண்டகாரண்யா ஆகிய பகுதிகளில் நடைபெறும் போராட்டங்கள் போன்று நம் தமிழ்நாட்டிலும் நாம் நடத்தவேண்டும்.

அப்போதுதான், உழைக்கும் மக்களுக்கான ஆட்சி அமைக்கப்பட்டு நம்முடைய அனைத்துப் பிரச்னைகளும் தீர்க்கப்பட்டு 'உண்மையான ஒரு பொற்கால ஆட்சி' அமையும்.

- ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# இந்து மதவெறி பாசிசமயமாகும் பள்ளி பாடத்திட்டம்

இந்தியாவில் ஒரு மிகப்பெரிய மாயா ஜாலப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வெள்ளையர்களை வெளியேற்ற இராமனும் கிருஷ்ணனும் தான் கட்ட பொம்மனாக சுபாஷ் சந்திரபோஸாக பகத்சிங்காக அவதாரம் எடுத்தனர். என்று இனி வருங்காலத்தில் படித்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை.

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் மைய அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியால் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றத்தின் (NCERT) சார்பில் தேசிய பள்ளிக் கல்வி பாடத்திட்டம் என்ற ஆவணத்தை ஆய்ந்தால் அவ்வாறு தான் தோன்றுகிறது.

**அவ்வாவணத்தின் முக்கிய அம்சங்களாவன :–**

* இந்திய தேச பக்தியை ஊட்டுதல்
* பள்ளிக் கல்வியிலேயே மதக் கருத்துக்களை தெரிந்துகொள்ளுதல்.
* பாரம்பரிய இந்திய விவசாய சமூகத்தை உயர்த்திப் பிடித்தல்
* மதிப்பீட்டு கல்வி
* பெண்கல்வி.
* வரலாறு கற்பித்தலை மாற்றியமைத்தல்
* சமஸ்கிருத கல்விக்கு முக்கியத்துவம்.

**இந்திய தேச பக்தி**

இந்திய தேசபக்தியினை ஊட்டுவதன் மூலம் நாடு வளர்ச்சி அடையும் என்று தோன்றும். ஆனால், ஆட்சியாளர்கள் கூறும் இந்திய தேச பக்தி என்பது இந்திய தேசிய வெறியை ஊட்டுவதாகும். உலகத்திலேயே இந்தியா தான் மிகச் சிறந்த பழமையான பாரம்பரியமிக்க நாடு என்றும் இந்தியப் பண்பாடுதான் உயர்ந்த பண்பாடு என்றும் இவ்வாவணம் கூறுகிறது.

இதன் பொருள் உலகின் இதர நாட்டு மக்களை பண்பாடு குறைந்தவர்கள் என்பதே.

ஏற்கனவே, நாட்டை ஆளும் பாஜகவின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் மாணவர் அமைப்பான அகில பாரத வித்யார்த்தி பரிஷத்–இன் கொள்கை அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ள வரைபடங்களில் தென் ஆசியா மற்றும் தென்கிழக்காசியாவில் உள்ள நாடுகளான பாகிஸ்தான், பங்ளாதேஷ், நேபாள், மாலத்தீவு, மியான்மர், இலங்கை, பூடான், ஆப்கானிஸ்தான், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, கம்போடியா ஆகியவற்றை உள்ளடக்கிய அகண்ட பாரதம் என்பதை இலட்சியமாகக் (?) குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியப் பண்பாட்டை மட்டும் உயர்ந்த பண்பாடாக காட்டுவதன் வாயிலாக அண்டை நாடுகளை ஆதிக்கம் செய்வதை நியாயப்படுத்த முடிகிறது. மேலும், இந்திய பண்பாட்டின் கேவலமான அம்சங்களான சாதியம், பெண்ணடிமைத்தனம், மூட நம்பிக்கைகள், வர்க்கத் ஏற்றத்தாழ்வுகள் முதலானவற்றை மூடி மறைக்கவும் உதவுகிறது.

**பள்ளிக் கல்வியில் மதக் கருத்துக்கள்.**

"இந்திய சமூகத்தின் கணிசமான பிரிவு இந்து மதத்திலிருந்து விலகியும் கடந்த கால பாரம்பரியத்தை குறித்த புரிதல் இல்லாமல் உள்ளது" என ஆவணம் கூறுகிறது.

மாணவர்கள் எந்த அளவிற்கு ஆன்மிகத்தில் அறிவு உள்ளனராக இருக்கின்றனர் என்பதற்காக ஆன்மீக மதிப்பீடு (SPIRITUAL QUOTIENT) செய்யப்படும்.

மேலும், மைய அரசாங்கத்தின் கல்வித் துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள ஆவணம் (செப்.2000) ஒன்றில், நம்முடைய அறிவுச் சுதந்திரத்திற்கு மிகப் பெரிய பாதிப்பை ஒரு புனிதமான நூலை மையமாகக் கொண்ட மதங்கள் ஏற்படுத்தியுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள் இஸ்லாம், கிறித்துவம் முதலான.

எனவே, மதக் கல்வி என்பது இந்து மதக் கல்வியே. இதன் மூலம் இஸ்லாமியர்களையும் கிறித்துவர்களையும் உள்ளடக்கிய மதச் சிறுபான்மையினரை இந்து மதக் கல்வி கற்குமாறு கட்டாயப்படு ீப்படுகிறது. மதச் சிறுபான்மையினரை எதிரிகளாக சித்தரித்து அவர்களின் மீதான இந்து மதவெறிக் கும்பலின் தாக்குதல்களை நியாயப்படுத்தவும் அதிகப்படுத் தவும் இக்கல்வி உதவி செய்யும். மேலும் மதக்கல்வி தருவதன் மூலம் ஒரு அறிவியல்பூர்வ கல்வி தருவது சாத்தியமில்லை.

**பாரம்பரிய இந்திய சமூகத்தை உயர்த்திபிடித்தல்**

ஆவணமானது, இந்திய விவசாய சமூகத்தை குறிப்பிட்டு அது தன்னிறைவு, சுய தேவை மற்றும் செயற்பாட்டு தன்னாட்சி ஆகியவை கொண்டதாக ஒவ்வொரு கிராமமும் விளங்கியது. என கூறுகிறது.

பெரும்பாலான இந்திய உழைக்கும் மக்களை இன்னமும் நிமிர விடாமல் அழுத்திக் கொண்டிருப்பது கிராமங்களில் நிலவும் சமூக அமைப்பு ஆகும். ஒரு சிலரிடம் மட்டுமே நிலங்கள் குவிந்து பல உழவர்கள் நிலமில்லாமல் கஷ்டப்படுவதும் நிலமிருந்தாலும் விவசாயம் செய்ய இயலாமல் அல்லலுறுவதும் சாதி, பெண்ணடிமைத்தனம் போன்றவையே கிராம சமூக அமைப்பின் அம்சங்கள். இத்தகைய நிலைமைகளுக்கு காரணம் – கிராம ஆளும் வர்க்கங்களே. அவர்களுக்கு சாதகமான கிராம சமூக அமைப்பை ஆவணம் தூக்கி பிடிக்கிறது.

**மதிப்பீட்டு கல்வி**

"சூழலும் கவலைகளும்" என்ற தலைப்பிட்ட முதல் பிரிவில் "மதிப்பீடு வளர்ச்சிக்கான கல்வி" என்ற துணைப்பிரிவில்" "மதம் ஒரு முதன்மை ஆதாரமாக மதிப்பீடுகளை உருவாக்குவதற்கான ஆதாரமாக ஐயமின்றி விளங்குகிறது. என ஆவணம் கூறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

பள்ளிக்கல்வியில் தொடக்க நிலையிலிருந்தே மதக் கல்வியை அளிக்கப்பட வேண்டும் என வும் அது குறிப்பிடுகிறது.

சமூக உணர்வும் அறிவியல் அணுகுமுறைகளையும் ஜனநாயக நெறிமுறையும் கொண்ட மதிப்பீட்டு கல்வி முறைக்கு மாறாக மதத்தின் (இந்து) அடிப்படையிலான கல்வி முறையை கொண்டதாகவே இத்தகைய மதிப்பீட்டுக் கல்வி இருக்கும். விளைவாய், மூடநம்பிக்கைகளும் அடிமை மனோபாவமும் கொண்டதாக மாணவர்கள் விளங்குவர். மேலும், ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்ற யதார்த்த கட்டமைப்பை கடவுள்தான் படைத்தார் என்றும் அவற்றை சரி செய்ய முடியாது என்றும் மாணவர்கள் சமத்துவமற்ற சமூகத்தை சரியானது என்றும் ஏற்றுக் கொள்வர்.

**பெண் கல்வி**

"இந்தியாவின் சிறந்த பாரம்பரியத்திற்கு ஏற்ப ஒவ்வொரு பாலிற்கும் (SEX) உரிய சிறந்த அம்சங்களை அங்கீகரிக்கவும் பேணப்படவும் வேண்டும்." என ஆவணம் கூறுகிறது. இதன் பொருள் ஆண்–பெண் இடையிலான வேறுபாடுகளை கட்டிக் காப்பதாகும். இந்திய பாரம்பரியம் என்ற சொல் பெண்ணடிமைத்தனத்தையே குறிக்கும். சாராம்சத்தில், பெண்களை சமையலறைக்குள் அடைப்பதும் குழந்தைகளை பெற்றுத்தரும் இயந்திரமாக ஆக்குவதும் இதர வீட்டு வேலைகளை செய்வதும் என நிலவும் யதார்த்தத்தை மேலும் பலப்படுத்துவதாகும்.

**வரலாறு கற்பித்தலை மாற்றியமைத்தல்**

"சமூக அறிவியல்கள்" என்ற தலைப்பின் கீழ் வரலாறு படித்தலின் அளவை குறைக்க வேண்டும் என்றும் உலக வரலாற்றை விட இந்தியாவின் அதுவும் குறிப்பாக சமகால இந்தியாவை படித்தலே போதும் என்றும் கடந்தகால வரலாற்றையும் அவற்றின் காரணங்களையும் அறிந்து கொள்வதை அவசியம் இல்லை என்றும் இந்தியனாக இருப்பதில் பெருமை கொண்டவனாகவும் தேசிய கண்ணோட்டத்தை (?) வளர்ப்பதாகவும் வரலாற்றுக் கல்வி இருக்க வேண்டும் என்றும் ஆவணம் கூறுகிறது.

உண்மை என்னவெனில், கடந்த கால வரலாற்றை அறிந்து கொள்ளாமல் நிகழ் காலத்தை புரிந்து கொள்ள இயலாது. அது போன்று, உலக வரலாற்றை புரிந்து கொள்ளாமல் இந்தியாவை கூட புரிந்து கொள்ள இயலாது. சமூகத்தில் நிலவும் சிக்கல்களுக்கான அடிப்படைகளை கடந்த கால வரலாற்றில் தான் கண்டுபிடிக்க இயலும்.

உண்மை அவ்வாறிருக்க, நோக்கம் என்னவெனில், இன்றைய சமூகத்தில் நிலவும் வர்க்க ஏற்றத்தாழ்வுகள், சாதியம், மதவெறி, மூடநம்பிக்கைகள், பெண்ணடிமைத்தனம், வெளிநாட்டு முதலாளிகளின் சுரண்டல்,ஆகிய இவற்றிற்கான தோற்றங்களையும் காரணங்களையும் அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவும் அவ்வாறு இருந்தால்தான் நிலவும் சமூகத்தை அப்படியே கட்டிக் காப்பாற்ற முடியும் என்பதுதான்.

**சம்ஸ்கிருத கல்வி**

சமஸ்கிருதம் தான் மிகவும் அறிவியல் பூர்வ கட்டமைப்பைக் கொண்ட மொழி என சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டதாகும் என ஆவணம் குறிப்பிடுகிறது.

இது மிகவும் பொய்யானது. உலகளவில் இந்தியாவை தவிர எந்தவொரு நாடோ பல்கலைக்கழகமோ அவ்வாறு கூறவில்லை.

இந்தியாவில் பல மொழிகள் எண்ணற்ற மக்களால் பேசப்பட்டாலும் வரிவடிவம் இல்லாமலும் அவ்வாறு இருந்தாலும் அம்மொழிவழியில் கல்வியையும் அளிப்பதில்லை.

நாடுதோறும் பல மொழிகளை பேசுகின்ற மக்கள் தங்களின் தாய்மொழிகளில் கல்வியினை முழுமையான விதத்தில் அளிக்குமாறு போராடிக்கொண்டிருக்கையில் அவற்றிற்கு செவி கொடுக்காமல் அவர்களின் மொழி மற்றும் அறிவு வளர்ச்சிக்கு தடையாக நிற்கிறது இந்திய அரசாங்கம்.

இவ்வாறு ஆவணத்தின் முக்கிய அம்சங்களை ஆய்ந்த நமக்கு ஒன்று மட்டும் தெளிவாக தென்படுகிறது. நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும் 'இந்தியா' என்ற ஒன்றையும் கட்டி காப்பாற்ற வேண்டும் என்பதுதான் அது.

இந்தியாவில் நடைபெறும் புரட்சிகர போராட்டங்களும் தேசிய இனப் போராட்டங்களும் தான் இந்த ஆவணத்தை வடிவமைக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தின.

இந்தியாவில் ஆங்காங்கே தேசிய இனப்போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றை ஒடுக்குவதற்கு ராணுவம் மட்டும் போதாது. கருத்தியல் தளத்திலும் ஒரு தேசியமும் தேவை என ஆளும் வர்க்கத்தினர் எண்ணுகின்றனர். இந்தியா என்பது ஒரே தேசம் (அ) தேசியம், இந்து மதம் ஒரே தேசிய மதம் சமஸ்கிருதம் ஒரே தேசியமொழி என்ற அடிப்படையில் இந்திய மக்கள் அணிதிரட்டப்படுவது ஆளும் வர்க்கத்திற்கும் அவசியமான ஒன்றாகிவிட்டது.

தேசிய இனங்களின் போராட்டமானது இந்தியாவை ஏகபோக சந்தையாக்கி தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள டாடா, பிர்லா போன்ற தரகுப் பெரு முதலாளிகளுக்கும் ஏகாதிபத்திய வாதிகளுக்கும் எதிராக இருப்பதால் அவற்றை மழுங்கடிக்கவும் தான் இந்து –இந்தி (அ) சம்ஸ்கிருதம் –இந்தியா என்ற அடிப்படையில் இந்து தேசியம் கட்டமைக்கப்படுகிறது.

மற்றொரு புறத்தில், ஆந்திரா, பீகார், தண்டகாரண்யா போன்ற பகுதிகளில் புரட்சிகர போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன.

அங்கு உழைக்கும் மக்கள் தங்களின் விடுதலையினை அடைந்து முன்னேறுவதும் அதைக் கண்டு இந்தியாவின் இதர பகுதி மக்கள் உத்வேகம் பெறுவதும் ஆட்சியாளர்களுக்கு கிலியினை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு, நிலவும் மக்கள் விரோத சமத்துவமற்ற சமூகத்தை கட்டிக் காப்பதற்கு, பள்ளிக் கல்வியிலேயே இந்து மத வெறியை உருவாக்கி ஒரு இந்து பாசிச சமூகத்தை கட்டமைக்க இந்த ஆவணம் வெளிவந்துள்ளது.

-அ.து.பி.



படிப்பகம்

www.padippakam.com

# குஜராத் பூகம்பம் ஏன் - இயற்கையின் சீற்றமா? (அ) ஆளும் வர்க்கங்களின் கொள்கைகளா?

இந்தியாவையே குலுக்கியது குஜராத் பூகம்பம். குஜராத்தின் பூஞ்ச், கட்ச் போன்ற பகுதிகளே தரைமட்டமாகிவிட்டன. குஜராத் பேரழிவு குறித்து ஓவியர் புகழேந்தி வரைந்த ஓவியங்களை கண்டு கவிஞர் இன்குலாப் இந்த சிறிய கவிதையை எழுதினார்

*எங்கெங்கிருந்தோ*
*நீளும்*
*உதவும் கைகள்*
*இட்லி விற்கும் ஆயா*
*அநாதை சிறுமிகள்......*
*சிவப்பு விளக்குப்*
*பெண்கள் ......*
*இன்னும் வெளியே*
*நீளாமல் இருப்பது......*
*கணக்கில் வராத*
*கருப்பு பணங்கள்*
*இலட்சம் கோடியில்.....*
*பூகம்பத்திற்குப் பிறகும்*
*அதிராமல் பதுங்கும்*

**குஜராத் பூகம்பம் இயற்கையின் சீற்றமா?**

குஜராத்தில் ஏற்பட்ட பேரழிவு இயற்கையின் சீற்றம் என்று சொல்லி ஒரு மாபெரும் படுகொலையை மறைக்க முயல்கின்றன பா.ஜ.க.வும் அதன் ஊதுகுழல் பத்திரிக்கைகளும். உண்மை என்ன? குஜராத் பூகம்பத்தில் உயிர் பலி தவிர்க்க முடியாததா? முடிந்திருக்கும். குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்ட அதே சமயம் கனடாவில் 8.9.ரிக்டர் அளவு பூகம்பம் ஏற்பட்டதாம். ஆனால் உயிர்ச்சேதம் மிகமிக குறைவு. இதேபோன்று இரண்டு வருடங்களுக்கு முன் கலிபோர்னியா பூகம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை சில நூறு பேர்கள் தான். இன்னும் இதே போன்று ஏராளமான உதாரணங்கள் உள்ளன. குஜராத்தில் ஏற்பட்ட உயிர் பலிக்கு முக்கிய காரணம் கட்டிடங்களே.குஜராத் பூகம்பத்தை ஆராய்ந்த அறிவியலாளர் ஒருவர் சொன்னது மிகவும் பொருத்தமாக இருக்கும். "மக்களை கொன்றது பூகம்பமல்ல; கட்டிடங்களே" என்று.

**பூகம்பத்திற்கான காரணம் என்ன?**

இந்தியாவில் பூகம்பம் உருவாவதற்கு முக்கிய காரணம் இமயமலை. இமயமலையானது மடிப்பு மலைகளாக உள்ளது. ஆனால், சிந்து - கங்கை சமவெளிகளுக்கு தெற்கே உள்ள பகுதிகள் நிலையான பிரதேசமாக உள்ளது. இவை இரண்டிற்கும் இடையே உள்ள பூமியின் மேல்மூடி சமநிலையற்றதாகவும் பூகம்பங்கள் சர்வசாதாரணமாக நிகழக்கூடிய நிலைமையிலும் உள்ளன. பாறைகளின் மீதான கனம் அளவை மீறி அதிகரிக்கும் போது அவைகள் மேற்கூறிய நிலையான பிரதேசங்கள் நோக்கி சரிகின்றன. இந்த முறையில் பாறையின் மீதுள்ள கனம் குறைகிறது. அதை ஈடுகட்ட ஒரு பூகம்பம் உருவாகிறது. எனவே இந்த பிராந்தியத்தில் ஏற்படும் பூகம்பமெல்லாம் புவியமைப் பினால் விளையும் பூகம்பங்களாகும்.

ஆனால், குஜராத் பூகம்பத்திற்கு மேற்சொன்னது மட்டும் காரணமாக அமையவில்லை. தொழில் மயமாதலாலும் நகர்புறமயமானதாலும் பெரிய தொழிற்சாலைகளையும் பல அடுக்கு மாடிகளையும் கட்டி நிலத்தடி நீரை பெரிய அளவில் உறிஞ்சியதும் ஒரு காரணம்.

மேலும், குஜராத்தில் கட்டப்பட்டு வரும் பிரம்மாண்ட மான நர்மதா அணையும் காரணமாக உள்ளது.

நாட்டில் பாதிக்கும் மேற்பட்டோர் பட்டினியுடன் படுக்க செல்லும்போது உணவு கொடுக்க வக்கில்லாத இந்திய அரசாங்கம் தன்னை வல்லரசென காட்டிகொள்ள குஜராத்தின் அண்டை மாநிலமான இராஜஸ்தானில் போடப்பட்ட அணுகுண்டும் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

**பூகம்பம் குஜராத்தில் ஏற்படும் என்று தெரியாதா?**

நன்றாகத் தெரியும். கட்டிட விதிகளை மீறி கட்டிடங்கள் கட்டப்பட்டன. கட்டிட முதலாளிகளும் வீட்டுமனை முதலாளிகளும், ஒப்பந்தக்காரர்களும் பொறியாளர்களும் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி விற்றுத் தள்ள வேண்டும் என்ற நோக்கில் ஒட்டுப்பொறுக்கி அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் கூட்டணியுடன் கட்டிடங்கள் கட்டப்பட்டன. மேலும், பூகம்பம் ஏற்படும் என ஒரு மாதத்திற்கு முன்பே எச்சரிக்கை விடப்பட்ட பின்னரும் வழக்கம் போல் அரசாங்கம் அலட்சியமாக இருந்தது.



**நொறுங்கி கிடக்கும் கட்டிடங்கள்**




படிப்பகம்

www.padippakam.com

**இந்தியாவில் பூகம்பம் தாக்கக் கூடிய மற்ற பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் இல்லையா?**

இமாசலப்பிரதேசத்தின் தலைநகரமான சிம்லாவை பூகம்பம் தாக்குவதற்கான அபாயம் அதிகம் உள்ளது. அதனால் அங்கு இருமாடி களுக்குமேல் கட்டக்கூடாது என சட்டம் உள்ளது. இந்த சட்டம் கிட்டத்தட்ட1980 வரையில் சரியாக கடைபிடிக்கப்பட்டது. ஆனால், முதன் முதலில் அரசாங்கத்தின் வீட்டு வசதி வாரியமே 5 மற்றும் 6அடுக்கு குடியிருப்புகளை கட்டியது. அதனை தொடர்ந்து தனியார் கட்டிட காண்ட்ராக்டர்களின் அத்துமீறல் நடந்தது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, இமாச் சலப்பிரதேச உயர் நீதிமன்ற மானது, தனக்கென ஒரு புதிய 11 அடுக்கு அலுவலகத்தை கட்ட முடிவெடுத்துள்ளது. வடக்கு சிம்லாவில் தொலைபேசித் துறை மக்கள் நெருக்கம் மிகுந்த இடத்தில் ஒரு 7அடுக்கு அலுவலகத்தை கட்டத்தொடங் கியுள்ளது. மழைக்காலத்தில் 1,00,000 மாக இருக்கும் சிம்லாவின் மக்கள் தொகை கோடைகாலத்தில் 1 மில்லியனையும் தாண்டி இருக்கும். இப்படி அனைத்து பூகம்பம் தாக்கும் பகுதிகளிலும் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் தனியார் கட்டிட காண்டிராக்டர்கள் ஆகியோர் கூட்டாக கொள்ளையடிக்க இப்படி அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டியுள்ளனர்.



**புஜ் அருகே பச்சால் என்ற இடத்தில் வீட்டினை இழந்து தவிக்கும் தாயும் மகளும்**

**நிலநடுக்கத்தை முன்னறிவிக்க கருவிகள் உண்டா?**

பூகம்பம் வரக்கூடிய நேரம், இடம், அளவு ஆகியவற்றை துல்லியமாக கண்டுபிடிக்க முடியாது. ஆனால், உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் குறிப்பாக சீனர்கள் பூகம்பம் ஏற்படுவதை மிருகங்களும் பறவைகளும் நடந்து கொள்ளும் வித்தியாசமான முறையிலிருந்து கண்டுபிடித்தனர். தண்ணீரின் நிறம் மாறுவதிலிருந்தும் கண்டுபிடிக்கலாம். பூகம்பத்தை முன்னறிய பல்வேறு முறைகள் உள்ளன. அவைகளில் சிலவற்றை நாம் பார்ப்போம்.

**அ. முன்னதிர்வுகள் :** பொதுவாக ஒரு பெரிய பூகம்பம் வரப்போவதற்குமுன் அதற்கு முன்னதாக சிறிய அளவில் அதே இடங்களில் பூகம்பம் ஏற்படும். அதனைக்கொண்டு நாம் அந்த இடத்தில் பெரிய பூகம்பம் வரும் என்று உறுதியாகச் சொல்லலாம். பூஜ் பகுதியில் பூகம்பம் வருவதற்கு முன்பு அதன் அருகில் உள்ள பவ நகரில் பூகம்பம் வந்துள்ளது.

**ஆ. நிலத்தடி நீர்மட்டம் :** நிலத்தடி நீர்மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை கொண்டு பூகம்பத்தை முன்னறிய முடியும். சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இதற்கு ஆழமான கிணறுகளை தோண்டி அதனுடைய நிலத்தடி நீர்மட்டத்தை ஆராய்வதை கொண்டு பூகம்பம் வருவதை முன்னறிவிக்கின்றன. சீனாவில் கிட்டதட்ட 1000 மீட்டருக்கு மேலாக தோண்டப்பட்ட 100 கிணறுகளை பூகம்பத்தை ஆராய்வதற்காக மட்டும் தோண்டி ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அதே போல் ஜப்பானில் 93 கிணறுகள் உள்ளன.

**இ. நிலத்தடி நீரில் ஏற்படும் வேதி–வினை மாற்றம்**

பூகம்பம் வருவதற்கு முன் நிலத்தடி நீரில் வேதி–வினை மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மாறியுள்ளதை பார்க்கலாம். சில இடங்களில் நீரில் குளோரைடும் சல்பைடும் பூகம்பம் வருவதற்கு முன்பு அதிகமாக உள்ளதை பார்க்கலாம். ஒரு முறை இமயமலை பகுதியில் பூகம்பம் வந்தபோது அதற்கு 2 அல்லது 3 நாட்கள் முன்பு தண்ணீரானது பால் போன்று வெண்மை நிறத்தில் வந்தது. அதனைக்கொண்டு வாடியா என்ற நகரில் உள்ள இமாலய மண்ணியல் நிறுவனம் (Institute of Himalayan Geology) பூகம்பம் வருவதை முன்னறிவிக்கிறது.

இதுபோன்ற எந்த முறையையும் இந்தியா கடைபிடிக்கவில்லை. மனித உயிரின் மகத்துவத்தை அறியாத மடையர்களின் ஆட்சியில் இதையெல்லாம் எதிர்பார்க்க முடியாதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

**பூகம்பம் வந்த பின் இந்திய அரசு, இராணுவம் மற்றும் வெளிநாட்டு உதவி பற்றி?**

காஷ்மீரில் 1½ இலட்சம் இராணுவத்தினரை நிறுத்தி அந்த மக்களின் தேசிய இன போராட்டங்களை நசுக்கும் இந்திய இராணுவம் குஜராத்திற்கு உதவிக்காக இராணுவத்தை மந்த கதியில்தான் அனுப்பினர். மாநில அரசின் மீட்புப் பணிகள் அதைவிட மந்தமாக இருந்தது. "நாங்கள் மந்த கதியில் செயல்பட்டது உண்மைதான்" என்று குஜராத்தின் உள்துறை அமைச்சர் ஒத்துக்கொண்டுள்ளார். மீட்புப் பணிகள் மந்த நிலையில் நடப்பதை இந்திய பிரதமரும் பிஜேபி கட்சியினரும் கூட ஒத்துக் கொண்டனர்.

உதவிக்கு வந்த இந்திய இராணுவம் அங்குள்ள மாநில மற்றும் மாநகராட்சி ஊழியர்களை குறை சொல்கிறது. மாறாக, மாநகராட்சி ஊழியர்கள் இராணுவத்தை குறை சொல்லி கண்ணா மூச்சி விளையாடுகின்றனர். பூகம்பம் ஏற்பட்டு 10 நாட்களுக்கு பிறகும் கூட பாதிப்படைந்த பல கிராமங்களுக்கு போலீஸோ, இராணுவமோ, மாநில மாநகராட்சி ஊழியர்களோ எட்டி கூட பார்க்கவில்லை. பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி மீட்பு பணி செய்வது என்று இந்திய நாட்டின் இராணுவத்திற்கு சரியான புரிதலே இல்லை. போராடும் மக்களை கொல்வதற்கு மட்டுமே பழக்கப்பட்ட இராணுவம் மக்களுக்கு உதவி செய்யும் என்று நாம் எதிர்பார்க்க கூடாதுதான்.



பூகம்பத்திற்கு பின்னரும் மீண்டும் பூகம்பம் ஏற்படும் என்று வீட்டில் உறங்காமல் வெளியே உறங்கும் அகமதாபாத் மக்கள்

பல்வேறு நாடுகளிலிருந்து வந்த வெளிநாட்டினர் தாம் நவீனஅறிவியல் மீட்பு கருவிகளை கொண்டுவந்து மக்கள் பலரை காப்பாற்றினர். உடைந்து கிடந்த கட்டிடங்களுக்குள் இருப்பவர்களை கண்டுபிடிக்க ஒளிபடக் கருவிகள், ஒலியை அறியும் கருவிகள், உயிரோடு இருப்பவர்களை கண்டுபிடிக்க பயிற்சி பெற்ற நாய்கள் இவைகளை வெளிநாட்டினர் கொண்டு வந்து பல நூற்றுக்கணக்க ான மக்களை உயிருடன் மீட்டனர்.

இந்திய அரசின் கையாலாகாத்தனம் பூகம்பத்தின் போதுதான் வெளிப்பட்டது. மக்களின் கோபம் ஓட்டுபொறுக்கி அரசியல் வாதிகளை நோக்கி திரும்பியது. பூகம்பப்பகுதிகளை பார்வையிட வந்த வாஜ்பாய், அத்வானி , சோனியாகாந்தி, குஜராத் மாநில முதல்வர் மற்றும் அமைச்சர்கள் மக்களால் 'கேரோ' செய்யப்பட்டும், திருப்பி அனுப்பியும் கல்லெடுத்து அடித்தும் காயப்படுத்தியுள்ளனர்.

**நிவாரணப் பொருட்களின் விநியோகம் பாதிக்கப்பட்ட மக்களிடையே எப்படி உள்ளது?**

பல மக்களும் சிறிய சிறிய தன்னார்வ அமைப்புகளும், மருத்துவர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரிய அளவில் உதவினர். எந்தவித சுயநலமுமில்லாமல் செயல்பட்டனர். பல முற்போக்கான, புரட்சிகர அமைப்புகளின் செயல் வீரர்களும் கல்லூரி பள்ளி மாணவர் களும் அர்ப் பணிப்பு மனப் பாங்குடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் இதை யெல்லாம் மறைத் துவிட்டு அரை டிரவுசர் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் மட்டும் தான் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வந்ததாக படம்பிடித்து காட்டின பாஜகவும் அதன் ஊதுகுழல் பிரச்சார சாதனங்களும்.

ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் இந்துமதத்தில் உள்ள மேல்சாதிகாரார்களுக்கு மட்டுமே சேவை செய்தனர். தலித்துக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் முஸ்லீம்களிடம் பாராமுகமாகவே இருந்தனர். அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட கூடாரங்களில் மேல் சாதியினர் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். தலித்துக்களுக்கு கூடாரங்களில் இருக்கும் உரிமை கூட மறுக்கப்பட்டது. அதேபோல் தலித்துக்களுக்கு தனியாக சமையற்கூடம் அமைக்கப்பட்டு உணவுப்பொருட்கள் விநியோகிக் கப்பட்டன. உயர்ந்த வகை உணவுப் பொருட்கள்



படிப்பகம்

www.padippakam.com

மேல்சாதியினருக்கும் தரமற்ற உணவுப்பொருட்கள் தலித்துக்களுக்கும் வழங்கப்பட்டது. பிறப்பின் அடிப்படையில் நாலாயிரம் சாதிகளாக பிரிந்து கிடக்கும் இந்து மதத்தின் அவலம் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடையே இருந்ததை கண்டு தமிழ்நாட்டின் தினமணி உட்பட பல பத்திரிக்கைகளும் கண்டித்து தலையங்கம் எழுதின.

பல நிவாரணப் பொருட்களை ஆர்.எஸ்.எஸ். திருடி அதில் தனது அமைப்பு சின்னத்தை பதித்து விநியோகம் செய்யும் ஈனச்செயலில் இறங்கியது. ஜப்பானிலிருந்து வந்த நிவாரணப் பொருட்களை விமான நிலையத்திலேயே கிட்டதட்ட 2 நாட்கள் மறியல் செய்து அரசிடமிருந்து பிடுங்கி தங்கள் பெயரில் விநியோகம் செய்தது. முஸ்லிம்கள் அதிகம் நிறைந்த பகுதியான பூஞ்ச் பகுதியில் உணவு விநியோகம் செய்யும் போது அவர்களை "ஜெய் ஸ்ரீராம்" என்று சொல்லச் சொல்லி வற்புறுத்தினர். அப்போதுதான் உணவுப் பொருட்களை தருவோம் என்று ஊளையிட்டனர் ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள். பூகம்பத்தின் துயரில் சிக்கிய மக்களிடம் கூட சாதி, மத ரீதியான வேறுபாடுகளை கடைப்பிடித்து தாங்கள் உண்மையான மதவெறி பாசிஸ்டுகள் என்று நிரூபித்தனர். அந்த அமைப்பின் நிவாரணப் பொருட்களின் விநியோகத்தில் மனித நேயம் மாண்டு போனது. இந்து வெறியும் உயர் சாதி வெறியும் தான் தலைதூக்கி நின்றது.

குஜராத் மக்களுக்கு நிவாரணப் பொருட்களாக ஏராளமான உதவிகள் வந்து கொண்டே இருந்தன. ஆனால் இவைகளுக்கு எந்த விதமான கணக்கும் இல்லை. எவ்வளவு ரூபாய் உதவி வந்துள்ளது. செலவு போன்ற கணக்குகள் இது வரை மத்திய ஆட்சியாளர்கள் கூறவில்லை. ஏராளமான ஊழல் நடந்து வருகிறது. நிவாரண உதவிகளில் கூட மக்களுக்கு போய்ச் சேரவிடாமல் அதிகாரிகளும் ஒட்டுப் பொறுக்கி அரசியல் வாதிகளும் மக்கள் வயிற்றில் அடிப்பதை தொடர்ந்து செய்து வருகின்றனர். பாகிஸ்தானிலிருந்து நிவாரணமாக வந்த 1000 கம்பளிகளை ஜம்மு – காஷ்மீர் மந்திரி ஒருவர் உள்ளூர் பஞ்சாயத்து தலைவர்களுக்கு விநியோகித்தார். இந்த ஊழலை டெஹல்கா டாட் காம். என்ற இணைய இதழ் அம்பலப்படுத்தியுள்ளது. இதுபோன்று இன்னும் பொருட்கள் மற்றும் பணத்தில் ஏராளமான கொள்ளை நடந்து வருகிறது.

கல்வி காவிமயம், அரசியல் காவிமயம், இன்று நிவாரணப் பொருட்களின் விநியோகத்திலும் தொடர்கிறது காவிமயம்.

**குஜராத் பூகம்பம் நமக்குத் தரும் பாடம் என்ன?**

இயற்கை வளங்களை நாசப்படுத்துவதன் மூலம் இயற்கையை வெல்வதல்ல; இயற்கையோடு இணைந்து வாழ்ந்தால்தான் நாம் இயற்கையை வெல்லமுடியும். சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட பெரும் இலாபவெறி நோக்கிலான ஏகாதிபத்திய பொருளாதாரக் கொள்கையினால் தான் ஏற்படுகின்ற எண்ணற்ற இராட்சத தொழிற்சாலைகள் கட்டப்படுதல், விண்ணை நோக்கிய கட்டிடங்கள் கட்டப்படுதல், நிலத்தடி நீரை அளவிற்கு அதிகமாக உறிஞ்சுதல் போன்றவைகளால் பூகம்பம் நிகழ்கின்றது. ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்வதற்காக அமைக்கப்பட்ட அம்பானியின் தொழிற்சாலைகள் ஏராளமான இராட்ச மோட்டார்கள் மூலம் தண்ணீரை உறிஞ்சி நிலத் தடி நீர்மட்டம் குறைந்து குஜராத்தில் பூகம்பம் ஏற்பட காரணமானது. இப்படிபட்ட இராட்சத தொழிற்சாலைகள் அமைப்பதை நிறுத்த வேண்டும். இரண்டாவதாக, பிரதானமாக எதிர்த்து முறியடிக்கப்பட வேண்டியது இந்து மத வெறிப் பாசிசம் என்பதை பூகம்பம் நிரூபித்துள்ளது.

– ஷ்யாம்

## 100 நாட்களாகியும் பூகம்ப நிவாரணமின்றி குஜராத் மக்கள் தவிப்பு...

**உலகம் முழுவதிலிருந்து குஜராத் பூகம்பத்திற்கு நிவாரணம் வந்து குவிந்தாலும் மக்களின் பாடோ திண்டாட்டம் தான். ஆம்.**

பூகம்பம் நடைபெற்று 100 நாட்கள் நிறைவு அடைந்ததை முன்னிட்டு, இறந்தோரின் நினைவாக கடந்த மே.5 அன்று அகமதாபாதிலும் கட்ச் பகுதியின் பல்வேறு இடங்களிலும் மவுன ஊர்வலங்கள் நடைபெற்றன.

அஞ்ஜார் என்ற இடத்தில், குழு 2001 (Group 2001) என்ற அமைப்பின் சார்பில் அரசாங்கத்தின் மந்தமான நிவாரண செயற்பாடுகளைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மேலும், அரசாங்கத்தின் நிவாரண திட்டங்களை கண்டித்து அரசு ஆவண எரிப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. அதிலும் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

அத்துடன், அஞ்சால் பகுதி மக்கள் இரத்தத்திலான கண்டன கடிதங்களை நாட்டின் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# தேர்வும் தேர்வின்மையும்

மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசாங்கமானது, வரவிருக்கும் கல்வியாண்டிலிருந்து பத்தாம் வகுப்பு வரை தேர்வு இல்லை என அறிவித்துள்ளது. இம்முடிவினை ஆதரித்தும் எதிர்த்தும் பல விவாதங்கள் பல அரங்குகளில் நடைபெற்று வருகின்றன. இம்முடிவு மேற்கொள்ளப்படு வதற்கு என்ன காரணம்? அது யாருக்கு நன்மை? யார் இதனால் பாதிக்கப்படுவர்? இவற்றை பார்ப்பதற்கு முன்பு நமது கல்வி முறையின் தேர்வு முறையினை சற்று சுருக்கமாகப் பார்ப்போம்.

இன்றைய கல்விமுறையும் அதன் அங்கமான தேர்வு முறையும் இந்திய மக்களை சுரண்டிக்கொழுத்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பிரதிநிதியாக செயற்பட்ட மெக்காலே என்பவரால் 1830களில் அறிமுகப்படுத்தப்பட்டது. உடலால் இந்தியனாகவும் உணர்வினால் பிரிட்டிஷ் ஆட்சிக்கு தொண்டு செய்பவனாகவும் இருக்கக் கூடியவாறு குமாஸ்தாக்களையும் அதிகாரிகளையும் உருவாக்குவதற் கென்றெ இது கொண்டுவரப்பட்டது. 1947–ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நேரடி ஆட்சியிலிருந்து விலகினாலும் பிரிட்டன் மற்றும் இதர ஏகாதிபத்தியங்களுக்கும் தொண்டு புரிகின்ற கல்விமுறையாகவே நீடித்து வருகின்றது. வடிவங்களில் சில மாறுபட்டாலும் சாராம்சத்தில் அந்த உள்ளடக்கத்தில்தான் இருந்து வருகின்றது. ஏனெனில், நோக்கம் அதே தான். ஏகாதிபத்திய சுரண்டலை இந்திய மக்கள் மீது மேலும் தீவிரமாக நடத்துவதற்கு உறுதுணை புரியும் வண்ணமே இது செயற்பட்டு அதற்கான ஆட்தேர்வு முறையாக இருந்து வருகிறது.

இக்கட்டுரையின் நோக்கம் தேர்வு முறையினை குறித்ததாகும்.அக்கண்ணோட்டத்தில் தான் இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

நம்முடைய தேர்வு முறையானது அறிவை வளர்த்துக்கொள்ளக் கூடிய ஒரு சாதனமாக இன்றி அறிவை அழிப்பதாக உள்ளது. தேர்வுகளில் மாணவர்களை எப்படி பதில் எழுத விடாமல் செய்வதும் அவர்களுக்கு எது கடினமாக இருக்கும் என்றும் அவர்களை எவ்வாறு திணறடிக்கலாம் என்றும் திட்டமிட்டே வினாத்தாள்கள் உருவாக்கப்படுகின்றன. தேர்வு அறைகளில் மாணவர் களை திருடனை கண்காணிப்பது போன்ற சூழல் நிலவுகிறது . மாணவர்கள் எப்போது தவறு செய்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை செய்தல் போன்ற முறைகளின் மூலமாக மாணவர்களை ஓர் எதிரியினை அணுகுவது போன்று தேர்வு அறைச்சூழல் நிலவுகிறது.

மாணவர்களை சிந்திக்கவிடாமல் அவர்கள் தகவல்களை மட்டும் அறிந்து கொள்ளும் விதத்தில் தேர்வு முறை உள்ளது. கேள்வித்தாள்கள் பெரும்பாலும் சூதாட்டப் பாணியில் ஒரு நம்பர் லாட்டரிச் சீட்டு போன்று 4 (அ) 3 பதில்களை கொடுத்து ஒன்றை தேர்ந்தெடுக்கின்ற வண்ணம் வடிவமைக்கப் படுகின்றன.

இச்சுரண்டல் சமூகத்தில் தன்னை சுற்றியுள்ள சமூகத்தை புரிந்துகொள்ளவும் அது எவ்வாறு இயங்குகின்றது என்பதை தெரிந்துகொண்டு விடக்கூடாது என்பதற்காகவும் சுரண்டலுக்கு சேவை செய்ய வெறும் தகவல்கள் மட்டும் போதும் என்பதனாலும் அதற்கு மேல் ஒரு மாணவர் எதையும் அறிந்து கொள்ள வேண்டாம் என்பதனாலும் இவ்வாறு திட்டமிட்டு தேர்வு கேள்வித்தாள்கள் வடிவமைக்கப் படுகின்றன. ஏகாதிபத்திய சுரண்டல் தீவிரமடைவதால் இப்பாணியிலான கேள்வித்தாள்கள் வடிவமைத்தல் என்பது அதிகரித்துக்கொண்டே செய்கிறது.

தமிழ்நாட்டில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் செமஸ்டர் முறை அறிமுகப்படுத்தப்பட்டு 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. செமஸ்டர் முறை இல்லாத பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழத்தின் கீழ் சில உள்ள கல்லூரிகளுக்கு தன்னாட்சி அந்தஸ்து அளிக்கப்பட்டு அவற்றில் செமஸ்டர் முறை நிலவி வருகிறது. கால்நடைக்கல்லூரி போன்றவற்றில் மூன்று செமஸ்டர் (TRI SEMESTER ) முறை உள்ளது.

ஆண்டிற்கு ஒரு முறை தேர்வு இருக்குமானால் தேர்வுக்கு ஒரு மாதம் முன்புதான் மாணவர்கள் தீவிரமாக படிப்பர் . இதர காலத்தில் சமூக விஷயங்கள் குறித்து சிந்தித்து செயற்படவும் சாத்தியம். ஆனால், செமஸ்டர் முறையில் அடிக்கடி தேர்வுகள் [அக மதிப்பீடு, செய்முறைத்தேர்வு, மாத (அ) பருவத் தேர்வு, குறிப்பேடு தயாரித்தல் (ASSIGNMENT)] நடப்பதனால் சமூகத்தின் நிகழ்வுகளை அறிந்துகொள்வது கூட அரிதாகி வருகிறது. அதற்கு நேரமும் இல்லை. தேர்வை மையப்படுத்தி கல்வி முறை நிலவுவதால் மாணவர்கள் சமூகத்திலிருந்து துண்டிக்கப்பட்டு சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட விடாமல் தடுக்கப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் மதுரை பல்கலைக்கழகம் சார்பில் முதன்முறையாக செமஸ்டர் முறை அறிமுகப்படுத்தப்பட்டதை எதிர்த்து அப்போது மாணவர்கள் போராடியது நினைவு கூரத்தக்கது.

தொழிற் படிப்புகளுக்கும் முதுகலைப் படிப்புகளுக்கும் நுழைவுத் தேர்வு நடைபெற்று வருவதும் நாம் அறிந்ததே.

தொழிற் படிப்புகளுக்கு நுழைவுத்தேர்வு வைக்கப்பட்டு அதில்

கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் தொழிற்கல்வி இடங்களை அளிக்கவேண்டும் என ஏற்கனவே பல அமைப்புகளால் கோரப்பட்டு வந்துள்ளன. அவற்றை காதில் கூட போட்டுக் கொள்ளவில்லை ஆட்சியாளர்கள்.

இவ்வாறு அனைத்து மட்டங்களிலும் தேர்வுகளை நடத்துவதன் காரணம் சாதாரண மற்றும் நடுத்தர வர்க்க மாணவர்களை மேலே செல்ல விடாமல் வடிகட்டும்



படிப்பகம்

www.padippakam.com

நோக்கத்தினால் தான் அவ்வாறு செய்யப்படுகிறது. படித்து முடித்துவிட்டால் வேலை கொடுக்க முடியாது என்பதனாலும் குறைந்த படிப்பு கொண்டவர்தான் மலிவான உழைப்பிற்கு தயாராக இருப்பர் என்பதாலும் இவ்வாறு வடிகட்டுதல் என்பது பல உதவாக்கரை தேர்வுகள் மூலம் நடைபெறுகிறது.

தேர்வுகளைமையமாக்கி கல்வி முறை நிலவ தேர்வுகளுக்கு படிப்பதே மாணவர்களின் கல்வி செயற்பாடாக மாறதேர்வுகளுக்கு மாணவர்களை தயார்படுத்துதலே ஆசிரியர்களின் கடமையாக மாறிவிட்ட இன்றைய சூழலில்,

திடீரென்று பத்தாம் வகுப்பு வரை தேர்வு இல்லை என தீர்மானிப்பதேன்?

மேலோட்டமாக இது நல்லதாக தோன்றினாலும் நோக்கம் அதற்கு மாறாக இருக்கிறது.

கல்வி மிகவும் வணிகமயமாகிவிட்ட சூழலில் சாதாரண மற்றும் நடுத்தர வர்க்கத்து மாணவர்களுக்கு பத்தாம் வகுப்புக்கு மேல் கல்வியினை தொடர்தல் என்பது மிகவும் பொருளாதார நெருக்கடியினை அளிக்கின்றது. தப்பித்தவறி பன்னிரண்டாம் வகுப்பு முடித்தாலும் கல்லூரி கல்வி (அ) உயர் கல்வி என்பது அசாத்தியமானதாக மாறி வருகின்றது. கல்வி செலவு அதிகமாவது மட்டுமன்றி மாணவர்களின் சொந்த பொருளாதார நெருக்கடியும் கடந்த 10 ஆண்டுகளாக தீவிரமடைந்து வருவதால் படிப்பை தொடர்தல் மேலும் கஷ்டமாகி வருகிறது. இந்நிலையில் பத்தாம் வகுப்பு வரை தேர்வு இல்லை என முடிவு எடுக்கப்பட்டு உள்ளது.

இன்றைய நவீன உற்பத்தி சூழலில், பணிபுரிவோர் குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்று திறன் மிக்கவராய் (SKILLED LABOUR) இருக்க வேண்டிய தேவை ஏகாதிபத்திய தரகுப் பெருமுதலாளிகளுக்கு இருக்கிறது. இன்றேல், நவீன உற்பத்தியில் படிப்பறிவில்லாதவர்களையோ பத்தாம் வகுப்பிற்கு கீழே தகுதி உள்ளோரையோ கொண்டு உழைப்பில் ஈடுபடுத்த முடியாது என்றும் முதலாளிகள் எண்ணுகின்றனர். அதே வேளையில், பத்தாம் வகுப்பு வரை தேர்வின்றி படிப்பைத் தொடர்வதால் ஆட்சியாளர்களுக்கு பெரிய பாதிப்பு இல்லை.

இங்ஙனம், கல்வி வணிகமயமாகிய பத்தாம் வகுப்பிற்கு பின் படிப்பை தொடர இயலாத நிலையில் சாதாரண மற்றும் நடுத்தர வர்க்க மாணவர்கள் கஷ்டப்படுவதாலும் நவீன உற்பத்திக்கு பத்தாம் வகுப்பு வரையிலாவது படித்தவர்கள் திறன் மிக்க உழைப்பாளிகளாக (SKILLED LABOUR) இருப்பர் என்பதனாலும் பத்தாம் வகுப்பு வரை தேர்வு இல்லை என்ற முடிவை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

**- செந்தூரன்.**

## வருகிறது சோதிடக் கல்வி!...

அறிவியல் கல்வி, தொழிற்கல்வி, கம்ப்யூட்டர் கல்வி போன்றவை படித்தாலும் வேலை கிடைக்காத இந்திய நாட்டில் புதிதாக சோதிடம், கைரேகை, வாஸ்து சாஸ்திரம் ஆகிய துறைகளுக்கான வகுப்புகள் வரும் கல்வியாண்டு முதல் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்படும் என மைய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இனி, வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, பாலியல் பலாத்காரம், வரதட்சணை கொடுமை, சாதி மற்றும் மத ஒடுக்குமுறை, கல்வியின்மை ஆகிய அனைத்து சமூகச் சிக்கல்களுக்கும் காரணம் கிரகங்களும் கோள்களும் இராகுவும் கேதுவும் நட்சத்திரங்களும் இராகுகாலமும் எமகண்டமும் தான் என்றும் பூமியில் உள்ள மனிதர்களால் அவற்றை தீர்க்க இயலாது என்றும் மாணவர்களும் இதர சமூகப் பிரிவினரும் மூளைச்சலவை செய்யப்படுவர்.

---

**தேர்வுகளை நடத்தும் நம்முடை தற்போதைய முறைகளானது மக்களை அணுகுவது போலன்றி எதிரியினை அணுகுவது போன்று உள்ளது.**

**அவை, இளைஞர்களின் அறிவு மற்றும் உடல் திறன்களின் உயிரோட்டமான வளர்ச்சிக்கு எதிராக உள்ளது.**

**- தோழர். மாவோ (10-3-1964)**

---

**(20ம் பக்கத்தின் தொடர்ச்சி)**

படையானது, (20 பேர் கொண்ட குழு) அசாம் – பங்களாதேஷ் எல்லையில் உள்ள மான்கச்சார் பகுதியில் உள்ள போரைபாரி கிராமத்தினை ஊடுருவி கைப்பற்ற முனைந்தபோது பங்களாதேஷ் இராணுவத்தினரும் மக்களும் அதை தடுத்தனர். அதில் இந்திய எல்லைப்பாதுகாப்பு படையின் 16 வீரர்கள் கொல்லப்பட்டு இருவர் பிடிக்கப்பட்டு மீதி இருவர் தப்பினர்.

உண்மை இவ்வாறிருக்க, நடப்பவை குறித்து பொய்யினையை இந்திய மக்களிடையே பரப்பி வருகிறது இந்திய அரசாங்கம்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாள் முதலிய அண்டை நாடுகளுடனான எல்லை சிக்கல்களை திட்டமிட்டு வேண்டுமென்றே தீர்த்துக்கொள்ளாமல் அவற்றை பயன்படுத்தி அண்டை நாடுகளை ஆக்கிரமிக்கும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகிறது இந்திய விரிவாதிக்க அரசு.

அதற்கான ஒரு பரிசை பங்களாதேஷின் மக்களும் இராணுவத்தினரும் இந்தியாவிற்கு கொடுத்துள்ளனர்.

16 இராணுவ விரர்களை பலி கொடுத்த பின்னரும் எல்லைச் சிக்கலை பேசித் தீர்க்கவோ ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவோ இந்தியா தயாரில்லை.

**- மில்லர்**



படிப்பகம்

# இதயத்தை அடகு வைத்தவர்கள்

இதயத்தை
அடகு வைத்தவர்களே!

வெண்மணியின்
வெப்பச் சுவாலை

தணிவதற்குள்...
கொடியன் குளத்தின்
ஒப்பாரி ஓலங்கள்
ஓய்வதற்குள்...

மேலவளவின்
வீழ்ந்த நாற்காலி
எழுவதற்குள்...

தாமிர பரணியின்
ரத்த ஓட்டங்கள்
உறைவதற்குள் . . .

வந்துவிட்டதோ ஆசை
நாற்காலி பிடிக்க
இல்லை இல்லை–அதன்
கால்களை பிடிக்க.

– பூந்தோட்டம்.

# மக்கள் யுத்தம்

அவர்கள் இன்று
'தீண்டாமை ஒரு பெருங்குற்றம். என்கிறார்கள்
குற்றமற்ற நாளிலேயே
நீதி நூல்களை மிதிக்கத் தொடங்கிவிட்டேன்.

'ஆலயத்தில் பிரவேசி' என்கிறார்கள்
தடைவிதித்த நாளிலேயே
நாத்திகனாகி விட்டேன்.

'இலவச கல்வி' என்கிறார்கள்
'படித்தால் நாக்கை அறு' என்ற நாளிலேயே
அவர்களின் மூர்க்கத்தனத்தை கற்றுக்கொண்டேன்

'இட ஒதுக்கீடு' என்கிறார்கள்
பிணம் புதைக்கும் பணி செய்தபோதே
அவர்களின் அதிகாரத்தை சுட்டெரிக்கத்
தொடங்கிவிட்டேன்.

இன்று
'சமத்துவபுரம்' என்கிறார்கள்
ஊருக்கு வெளியில் ஒதுக்கிய போதே
கானகத்தின் அரவணைப்பில் வாழ பழகிவிட்டேன்.

ஐயா, சார் என்றாலும்
தீண்டத்தகாதவன், நீச்சன் என்ற நாளிலேயே
ஆயுதம் தரித்துவிட்டேன்.

நாளை
என்னவென்று எதை கொடுத்தாலும்
பணிவதற்கில்லை
ஆதிக்க சாதிகளை வேரோடு சாய்க்க
அணிதிரண்டு நிற்கிறேன்.

– அப்துல் ரவூப்

www.padippakam.com

# உன் மறைவுகூட...



உன்மறைவுகூட
கற்பித்தலின் துவக்கம்
தருமபுரி மண்ணில்

உழைக்கும் மக்களை திரட்டி
மக்களெல்லாம் புத்தகளத்திற்கு வருமுன்னே
உன்னை இல்லாமல் செய்து விட்டார்

கிராம குடிசைக்குள்
வர்க்கத்தீ மூட்டி
அத்தீ பற்றி பரவும் முன்னே
உன்னை எரித்து விட்டார்

மக்கள் விடுதலையின் பொருட்டு
அழகு தமிழில் பாட்டெழுத தொடங்கு முன்னே
உன் இமைமூட செய்துவிட்டார்

செம்மலர்கள் பூத்த மண்ணில்
களையெடுத்து உரமிட்டாய்
மலர்கள் பூக்க தொடங்கும் முன்னே
உன் உடலை வீழ்த்திவிட்டார்.

வசந்தத்திற்கு முன்மொழிந்த
பாலனை தொடர்ந்து
இருபது ஆண்டுகள் கழித்து
உன்னை வழிமொழிய செய்துவிட்டார்

எங்களுக்காக பல தியாகங்கள் செய்த
உன்னை கொன்று விட்டு
எங்களை இரத்த கடனாளியாக்கி விட்டார்.

- பாலன்

மவுனம்

இங்கு என் சகோதரர் உறங்குகிறார்

வெளுத்த முகத்தோடும் துயருற்ற இதயத்தோடும்
அவர் அருகே நிற்க வேண்டாம்
அவர் புன்னகைத்துக் கொண்டிருக்கிறார்

அவரின் உடலை மலர்களால் மறைக்க வேண்டாம்
மலருடன் மலர்களை சேர்ப்பதால் என்ன பயன்?

உன்னால் இயன்றால்
உன் இதயத்தில் அவரை புதை

நீ கண்டுணர்வாய்
இதயத்தின் பறவையொலியில்
தூங்கும் உன் ஆன்மா விழித்துக்கொண்டதை

உன்னால் இயன்றால்
சிந்து சில கண்ணீர்த் துளிகளை
அத்துடன்
உன் உடலின் குருதி முழுவதையும்

---

(நக்சல்பாரி எழுச்சியின்போது கல்கத்தா சிறைச்சாலை சுவரொன்றில் எழுதப்பட்ட இது மாணவர் ஒருவிரால் எழுதப்பட்டதாக கருதப்படுகிறது)



படிப்பகம்

www.padippakam.com

# காதலர் தினமும் - காதலும்

இன்றைய நமது சமூகத்தில் காதலர் தினம் சில வருடங்களாக மிகவும் பரவலாக குறிப்பாக இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் மத்தியிலும் மிகவும் பிரபலம் அடைந்து வருகிறது. இவற்றை ஆதரித்து ஊக்கப்படுத்தும் விதமாக தகவல் தொடர்பு சாதனங்கள் அனைத்துமே அன்று சிறப்பு நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவது போன்ற முறைகளில் தங்களது பங்கையாற்றுகின்றன. வர்த்தக நிறுவனங்களும் அன்றைக்கு வாழ்த்து அட்டைகள் விற்றல், சிறப்பு நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவது போன்ற முறைகளில் தங்கள் பங்கையாற்றுகின்றன. இதற்கிடையில், இவை நமது பண்பாட்டிற்கு எதிரானது என கூறி விஸ்வ இந்து பரிஷத் , ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்துத்துவ அமைப்புகள் எதிர்க்கின்றன டெல்லி, மும்பை போன்ற நகரங்களில் காதலர் தினம் கொண்டாடிய அரங்கங்கள் அவ்வமைப்புகளால் அடித்து நொறுக்கப்பட்டன. இவற்றை பின்னால் பார்ப்போம். முதலில் காதலர் தினம் உருவான வரலாற்றை சுருக்கமாக பார்ப்போம்.

கிளாடியஸ் என்ற ரோமின் ஈவிரக்கமற்ற பேரரசன் ஒருவன் கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தான். அவனுக்கு தன்னுடைய பேரரசை விரிவுபடுத்த உடல் வலிமையுள்ள ஆண்கள் தான் இராணுவத்திற்கு தேவைப்பட்டனர். ஆனால் திருமணமான ஆண்கள் போருக்கு செல்ல விரும்பவில்லை. ஏனெனில், உயிருடன் நாடு திரும்ப இயலாது என்பதனாலும் அவ்வாறு திரும்பினாலும் அதற்கு ஆண்டுக் கணக்கில் ஆகும் என்பதாலும் ஆண்கள் போருக்கு செல்ல தயாராக இல்லை. எனவே திருமணம் தடைசெய்யப்பட்டது.

அப்போது ரோமில் வசித்து வந்த வாலைன்டின் என்ற கிறிஸ்துவ மதகுரு இரகசியமாக திருமணத்தை நடத்தத் தொடங்கினார். நீண்ட காலமாகவே காதலர்களுக்கு அவர்தான் திருமணம் நடத்தி வந்தார் .

அப்போது தன்னுடைய பேரரசை விரிவாக்க இவரின் செயல்பாடு தடையாக இருப்பதாலும் மேலும் மக்களிடையே குறிப்பாக காதலர்களிடையே தன்னுடைய செயற்பாட்டினால் பிரபலம் அடைந்ததாலும் அவரை சிறையிலடைத்த அரசன் கி.பி.14/2/270 அன்று அவருக்கு மரணதண்டனை கொடுத்து கொன்றான். இந்த தினத்தை தான் வாலைன்டின் (காதலர்கள்) தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில் காதல் என்பது புனிதமானது என்றும் அதனை தனித்து சமூகத்தில் இருந்து பிரித்து உயர்வானதாகவும் சித்தரிக்கப்படுகிறது. காதல் யாருக்கும் யாருடனும் ஏற்படலாம் என்றும் அதற்கு இரு மனங்களும் ஒன்றுபட்டால் போதும் என்றும் மாயையையும் ஏற்படுத்தப்படுகிறது.

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதில்லை"; அவை வர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்று மார்க்சிய மூலவர்கள் கூறியது இங்கு சரியாக இருக்கும். திடீர் என்ற ஒரு மேல்தட்டு வர்க்க ஆணுக்கும் பாட்டாளி வீட்டு பெண்ணுக்கும் காதல் ஏற்படுவது என்பது அரிதிலும் அரிது. அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பது கூட அவர்கள் தங்கள் சமூக உறவுகளில் ஈடுபடும்போதுதான் சாத்தியமான நிலையில் இவர்களிடையே தொடர்பு என்பதும் கூட மிகவும் அரிதான ஒன்றாக உள்ளதால் அவர்களிடையே காதல் ஏற்படுதல் என்பது மிகவும் கேள்விக்குரிய ஒன்று. அப்படியே ஏற்படும் காதல்கள் கூட மிகவும் முரண்பாடுகளோடு துண்டிக்கப்படுகின்றன. இவை திருமணத்தில் முடிந்தால் கூட அந்த முரண்பாடுகள் தொடர்கின்றன. இப்படிப்பட்ட காதல்களில் அதிகமாக ஆணை சார்ந்து பெண்ணும் ஒரு சில நேரங்களில் மட்டும் அதிகமாக பெண்ணையே சார்ந்து ஆணும் இருக்கின்றனர். இந்த சார்பு நிலையில் கூட ஜனநாயகமும் குறைய வாய்ப்புகள் உள்ளன. இருவரின் உழைப்பிலும் அதாவது சுய பொருளாதார சமமின்மை நிலவுகின்றது. எதார்த்தத்தை மீறிய இத்தகைய காதல்கள் அதிகமாக தோல்விகளிலும் விவாகரத்திலும் முடிகின்றன.

காதலை வெளிப்படுத்த தங்க நகைகள், பரிசுப் பொருட்கள் என்று மனித கலாச்சாரமும் ஒரு பண்டமாக மாறிவிட்டது. ஏகாதிபத்திய காலகட்டத்தில் காதலும் ஒரு பண்ட வகைப்பட்டதாகவே உள்ளது.


தனது தேங்கிப்போன பொருட்களின் விற்பனையை மூன்றாம் உலக நாடுகளின் மீது திணிக்க இவை போன்ற பண்பாட்டை பரப்புதலை அங்குள்ள ஆளும் வர்க்கங்களோடு ஏகாதிபத்தியத்தால், திட்டமிட்டு செயல்படுத்தப்படுகிறது. ஏகாதிபத்தியம் தனது மூலதன திரட்சிக்கு பயன்படுகின்ற வகையில் காதலையும் பயன்படுத்துகிறது. காதல் என்பது வெறும் உடல் சம்பந்தப்பட்ட விசயமாக முதலாளித்துவம் பிரச்சாரம் செய்து வருகிறது. காதல் என்பது வர்க்கங்களை மீறிய ஒன்று என்ற சித்தரிப்பதன் வாயிலாக ஏகாதிபத்திய சக்திகள் வர்க்கங்கள் இருப்பதை மறைக்கின்றன. வர்க்கப் போராட்டத்தில் இருந்து மக்களை திசை திருப்பவும்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களின் போராட்டத்தை மழுங்கடிக்கவும் மாணவர்கள் - இளைஞர்களை திசைதிருப்பவும் இவைகள் முயலுகின்றன.



காதலர் தினத்தன்று டெல்லியில் உள்ள வெளிநாட்டு உணவு விடுதி ஒன்றில் மேசையினை உடைக்கும் சிவசேனாவினர்

இவைகளை எதிர்க்கும் இந்துத்துவா அமைப்புகள் நிலவுடமை அமைப்பையும் நிலவுடமை கலாச்சாரத்தையும் கட்டிக்காக்கவும் இவற்றை எதிர்க்கின்றன. ஏகாதிபத்தியங்களின் மூலதனச் சுரண்டலையும் அவை நாம் மக்களின் உழைப்பையும் செல்வங்களையும் கொள்ளையடிக்கும் போது வரவேற்கும் இவை அதன் கலாச்சாரத்தை எதிர்க்கின்றன. மேலும், இவை ஆண்கள் பல திருமணங்கள் செய்வதையும், பெண்களை பலாத்காரம் செய்வதையும் அங்கீகரிக்கின்றன. பெண்கள் ஜனநாயக பூர்வமாக தங்களுக்கு பிடித்த ஆணை காதலிக்கவும் திருமணம் செய்யவும் இவை எதிர்க்கின்றன. நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தை பொறுத்தவரை திருமணம் என்பது ஆடுமாடுகளுக்கு இணைசேர்ப்பது போலத்தான், வேறு எப்படியும் இருக்க முடியாது.

நிலவுடமை சக்திகளுக்கும் தரகு பெரு முதலாளிய சக்திகளுக்கும் ஆதரவாகத்தான் 'இந்துத்துவா' என்ற கோட்பாடு தூக்கிப்பிடிக்கப்படுகிறது. அதன் வாயிலாக 'இந்தியா' என்ற ஒருங்கிணைக்கப்பட்ட சந்தையையும் நிலவுடமை உற்பத்தி முறையையும் பாதுகாக்க முனைகின்றன.

ஏகாதிபத்திய பண்பாடு மற்று ம் நிலவுடமைப் பண்பாடு இந்த இரு அம்சங்களுக்கு மாறாக உழைக்கும் மக்களின் காதல் என்பது சமூகத்தில் மேல் இருந்தும் புனிதமானதும் என்றில்லாமல் அவர்களின் சமூக உறவுகளில் இருந்து வருவதால் எதார்த்தமாகவே உள்ளது. அங்கு காதலில் பால் உணர்ச்சி என்பது ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகிறது. இரு பாலாருமே அதிகமாக உழைப்பில் ஈடுபடுவதால் அங்கு பால் வேறுபாடுகள் குறைகின்றன. அங்கு இருவருமே உழைப்பதால் சார்புநிலை என்பது குறைகிறது. யாரையும் யாரும் சார்ந்து இல்லை. எனவே சுதந்திரம் என்பது அதிகமாகவே உள்ளது.

அங்கு முரண்பாடுகள் சிறிய அளவிலேயே உள்ளன. அப்படியே ஏற்படும் முரண்பாடுகள் விரைவில் தீர்க்கப்படுகின்றன அல்லது துண்டிக்கப்படுகின்றன. எங்கு பால் வேறுபாடுகள் குறைகின்றனவோ அங்கு காதலும் மேன்மையானதாக இருக்கின்றது.

– கணேசன்

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

*அன்பார்ந்த வாசகர்களே!*

*நீண்ட இடைவெளிக்கு பின் 'முன்னோடி' இதழ் மீண்டும் வெளி வருகிறது, நிதி நெருக்கடியினால் தொடர்ச்சியாக இதழ் வெளிவருவதில் சிக்கல் நீடிக்கிறது.*

*இதழை தொடர்ச்சியாக வெளிக்கொணர நிதியினை நன்கொடையாக வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும், படைப்புகளையும் அனுப்புமாறு தோழமையுடன் கேட்டுக்கொள் கிறோம்.*

**– ஆசிரியர் குழு**



படிப்பகம்

www.padippakam.com

# சென்ற பத்து ஆண்டுகளும் வேலையின்மையும்

நாட்டில் சென்ற பத்து ஆண்டுகளாக நடைமுறைப் படுத்தப்படும் சீர்திருத்தங்கள் வேலையின்மையை குறைக்கவும் பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத் தவும் அவற்றை செயல்படுத்துவதாக கூறப்ப டுகின்றன.

அவை புதிய பொருளாதார கொள்கை என்ற பெயரில் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கம் என்ற வடிவங்களில் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1991-இல் கொண்டு வரப்பட்ட இப்புதிய பொருளாதார கொள்கை காங்கிரஸ் ஆட்சியாளர்களால் நாட்டின் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், வளர்ச்சியை மேம்படுத்தவும் என்ற பெயரில் புகுத்தப்பட்டன. பின்னர் வந்த ஆட்சியாளர்களும் இதையே தொடர்ந்தனர். தற்போது ஆட்சியில் உள்ள பா. ஜ.க.வும் அதையே வாந்தியெடுத்து வருகின்றது.

"நாம் உலகத்தின் ஓர் அங்கம்; எனவே உலகமயமாக்கல் தவிர்க்க முடியாத ஒன்று" என தகவல் தொடர்பு சாதனங்களும் விளம்பரம் செய்கின்றன. உண்மையில் கடந்த பத்து ஆண்டுகளில் இக்கொள் கையினால் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கின்றனவா இல்லையா என்பதை ஆட்சியாளர்கள் தரும் புள்ளி விபரங்களிலிருந்தே பார்ப்போம்.

**பொதுத்துறை நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பங்கீடு**

| | 1991 | 1991 | வளர்ச்சி விகிதம் 1991-1999 வரை |
|---|---|---|---|
| | இலட்சத்தில் | | |
| 1. மத்திய அரசு | 34.10 (20.6)% | 32.53 (16.8) | -0.6 |
| 2. மாநில அரசு | 7112 (37.3) | 74.58 ( 38.4) | 0.6 |
| 3. அரசு சார்ந்த | 62.22 (32.7) | 64.6 ( 33.2) | 1 0.5 |
| 4. உள்ளாட்சி அமைப்புகள் | 23.13 (12.1) | 22.46 (11.6) | -0.3 |
| மொத்தம் | 190.57 (100.00) | 194.18 (100.00) | 0.2 |

குறிப்பு:
அடைப்புக் குறிப்புக்குள் குறிப்பிடபட்டு உள்ளவை பொதுத்துறை யில் நிலவும் மொத்த வேலை வாய்ப்பின் சதவீதத்தை குறிப்பவை.
ஆதாரம் பொருளாதார ஆய்வு, இந்திய அரசாங்கம் (1999–2000)

1993-2000–இல் கிராமப்புறங்களில் 0.67% சதவிகிதமும் நகர்ப்புறங்களில் 1.34 சதவிகிதம் மட்டுமே வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளன. வேலைவாய்ப்பு களில் பெரும்பங்கு வகிக்கும் பொதுத்துறை நிறுவனங் களில் வேலைவாய்ப்புகளை பார்ப்போம்.

இப்படி பொதுத்துறைகளில் தனியார் மயம் போன்ற கொள்கைகள் மூலம் விருப்பு ஓய்வு திட்டம், அரசு பங்குகளை விற்பது பொன்ற முறைகளில் பொது துறைகளில் வேலைவாய்ப்புகள் கடந்த பத்து ஆண்டுகளில் குறைந்துள்ளது தெரியவருகின்றது.

பொதுத் துறைகள் இப்படி இருக்க தனியார் மயம் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்று அனைத்து பிரச்சார ஊடகங்களும் விளம்பரம் செய்கின்றன. ஏகாதிபத்திய வாதிகளும் தரகு பெருமுதலாளிகளும் துவங்கும் தொழிற்சாலைகள் போன்றவற்றின் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்று சொல்லப்படுகின்றன. இவைகளில் உண்மையுள்ளதா? கடந்த பத்து ஆண்டுகளின் தனியார் துறைகளிலான வேலைவாய்ப்புகளை பார்ப்போம்.

**தனியார் துறை வேலைவாய்ப்புகள்**

| ஆண்டு | தனியார் துறை | சதவிகிதம் |
|---|---|---|
| 1990 | 75.88 | 28.8 |
| 1991 | 76.76 | 28.7 |
| 1992 | 78.46 | 29.0 |
| 1993 | 78.51 | 28.9 |
| 1994 | 78.30 | 29.0 |
| 1995 | 80.59 | 29.3 |
| 1996 | 85.12 | 30.5 |
| 1997 | 86.86 | 30.8 |
| 1998 | 87.46 | 31.1 |

ஆதாரம்: பொருளாதார ஆய்வு, (1999–2000)

இந்தப்புள்ளிவிவரங்கள் படி 30 சதவிகிதத்தை ஒட்டியே வேலைவாய்ப்புகள் உள்ளன. தனியார் மயம் போன்ற கொள்கைகள் மூலம் வேலைவாய்ப்புகள் பெருகும் என்று சொல்லியது இவர்கள் சொல்லும் புள்ளி விவரங்களிலேயே இந்த சீர்திருத்தங்கள் என்ன விளைவை ஏற்படுத்தியுள்ளன என்பது இதில் இருந்து தெள்ளத் தெளிவாக தெரிகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படி குறைக்க முடியும்? இவை என்றென்றும் தொடருமா? இந்த கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு முன் இந்தியாவின் பொருளாதாரத்தை சற்றுப் பார்ப்போம்.

இந்தியா ஒரு அரை காலனிய, அரை நிலப்பிரபுத்துவ நாடு. நாட்டின் உற்பத்தியில் விவசாயமே முதன்மையானது. ஏகாதிபத்தியத்தை சார்ந்த அதாவது தரகு முதலாளித்துவமே இங்கு உள்ளது. எனவே இந்தியாவின் உற்பத்தியில் நிலபிரபுத்துவமும் ஏகாதிபத்தியமுமே முதன்மை சக்திகளாக உள்ளன. நமது நாட்டின் உற்பத்தியில் முதுகெலும்பான விவசாயத்தின் நிலைமையைப் பார்ப்போம்.

சாராம்சமாக, விவசாயத்திற்கு எந்த விதமான முக்கியத்துவமும் தரப்படுவதில்லை

நிலவும் நிலப்பிரபுத்துவ உற்பத்தியில் நிலங்கள் ஒரு சாராரிடமே குவிந்து கிடக்கின்றன. நிலங்கள் துண்டு துண்டாக இருப்பதும் நீர்பாசன வசதியின்மையும் இதர உட்கட்டுமான வசதிகள் இன்மையும் உற்பத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. மற்றும் உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் விலை உயர்வினாலும் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காததாலும் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதனால், சிறு நிலவுட மையாளர்களும் கூலி விவசாயிகளும் நகரங்களை நோக்கி விரட்டப்படுகின்றனர். சில வருடங்களாகவே உடல் உறுப்புகளை விற்பது, குடும்பங்களோடு தற்கொலை செய்து கொள்வது அவர்களிடையே அதிகரித்து வருகின்றன.

கிராமங்களில் நிலை இப்படி இருக்க, அதிகமாக வேலையில்லாத் திண்டாட்டம் உள்ள நகரங்களில் கிராமங்களில் இருந்து வந்த மக்களால் இந்த வேலையில்லாப்பட்டாளம் இன்னும் அதிகரிக்கின்றது. சர்வதேச அளவில் உற்பத்தி தரத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லி அதிக திறனுள்ள இயந்திரங்கள் புகுத்துவதன் மூலமும் ஆட்குறைப்புகள் செய்யப்படுகின்றன. முதலாளித்துவத்திற்கு வேலையில்லா பட்டாளம் இருப்பது உழைப்பை குறைந்த அளவில் சுரண்டவும், வேலைசெய்யும் தொழிலாளர்களை மிரட்டவும், வேலை நேரத்தை அதிகப்படுத்துவது, கூலியை குறைப்பது, போன்ற முறைகளில் தனது சுரண்டல் தடையின்றியும் எந்தவித எதிர்ப்பும் இன்றியும் நடைபெற வேலையில்லாத பட்டாளம் இருப்பதை அது திட்டமிட்டு உருவாக்குகிறது.

இப்படி இந்தியாவின் உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளை பார்த்தோம். அவ்வாறெனில், வேலையின்மை தீர என்ன வழி? புதிய ஜனநாயகச் சமூகம் அமைவது ஒன்றுதான் வழி.

குவிந்து கிடக்கும் நிலங்களை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் உற்பத்தி அதிகரித்து மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கும்.இதன் மூலம் சந்தை தேவை அதிகரித்து நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் வேலைவாய்ப்புகள் பெருகும். நிலங்கள் பகிர்ந்தளிப்பதன் மூலம் நிலபிரபுத்துவத்துக்கு எதிராக இங்கு ஒரு தேசிய மூலதனம் பெருகுவதனால் அந்த மூலதனம் தரகு முதலாளியம் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதாகவும் இருக்கும். மேலும், உற்பத்தி என்பது இலாப நோக்கத்திற்காக இல்லாமல் மக்களின் தேவைக்கேற்ப உற்பத்தியாக இருக்கும். அப்போது வேலையில்லா திண்டாட்டம் என்ற பிரச்சனையும் இருக்காது.

**– கனில்**

## திருபாநிதியை ஊருக்குள் விடாமல் தடுத்த கிராம மக்கள்

*திருப்புவனம் அருகே பொதுமக்களைச் சந்தித்து வாக்கு சேகரிக்கச் சென்ற மானாமதுரை தொகுதி பாஜக வேட்பாளர் டாக்டர். கிருபாநிதியை இரு கிராம மக்கள் ஊருக்குள் நுழைய விடாமல் திருப்பி அனுப்பினர்.*

*திருப்புவனம் அருகே பொட்டப்பாளையம், முக்குளம், வயல்சேரி, உளுத்திமடை உள்ளிட்ட 14 ஊராட்சிகள் விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளன. ஆனால் இந்த ஊராட்சிகள் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை (தனி) தொகுதியில் அடங்கியுள்ளன.*

*மாவட்டம், தொகுதி போன்றவை வேறுபடுவதால் இந்த 14 ஊராட்சிகளிலும் உள்ள கிராமங்களில் கடந்த 5 வருடங்களில் எந்தவொரு அடிப்படை வசதியும் செய்துதரப்பட வில்லை. அதனால் இந்த கிராம மக்கள் ஆத்திரத்தில் இருந்தனர்.*

*இந்நிலையில் மானாமதுரை தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் கிருபாநிதி, மேற்கண்ட ஊராட்சிகளில் உள்ள கருவக்குடி, பூப்பிடாம்பிகை ஆகிய இரு கிராமங்களுக்கு வாக்கு சேகரிக்கச் சென்றார்.*

*இதையறிந்த அந்த கிராம மக்கள் கிராம எல்லையில் வந்து நின்றுவேட்பாளர் கிருபாநிதி வந்த காரை மறித்து நிறுத்தினர். எங்கள் கிராமங்களில் எந்தவொரு அடிப்படை வசதியும் இதுவரை செய்துதரப்படவில்லை. எனவே யாரும் எங்களது கிராமங்களுக்கு வாக்கு சேகரிக்க வரக்கூடாது. திரும்பிச்செல்லுங்கள் என்று கூறினர்.*

*இதையடுத்து வேட்பாளர் கிருபாநிதி அந்த கிராமங்களுக்குச் செல்லாமல் திரும்பினார்.*

***தினமணி – 28–4–2001***



படிப்பகம்

www.padippakam.com

# சமஸ்கிருதமயமாகும் கல்வி

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரெஞ்சு மக்கள், அரசன் பதினாறாம் லூயி என்பவனை எதிர்த்து உண்ணுவதற்கு ரொட்டி கேட்டு போராடிக்கொண்டிருக்கையில் ரொட்டி இல்லாவிட்டால் கேக் சாப்பிடச் சொன்னானாம் அவ்வர சன்.

அது போன்று, நாடெங்கும் தாய்மொழிவழி கல்வி கோரி மாணவர்களும் ஆசிரியர்களும் அறிவுஜீவிகளும் போராடிக்கொண்டிருக்கையில் சமஸ்கிருதத்தை பயிலு மாறு சொல்கிறது மைய அரசாங்கத்தின் கல்வித்துறை

சென்ற 1999 – 2000 ஆண்டு சமஸ்கிருத ஆண்டாக அறிவிக்கப்பட்டு சமஸ்கிருதத்தை ஊக்குவிக்கும் வண் ணம் பல்வேறு நிறுவனங்கள் புதிதாக தொடங்கப் பட்டதுடன் அதை பிரபலபடுத்தும் விதமாக பல்வேறு முகாம்களும் நடத்தப்பட்டன.

நடப்பாண்டில் சமஸ்கிருத மாநாடு நடத்தப்பட்டு அதில் பிரதமர் வாஜ்பாயும் கலந்து கொண்டதோடு பல அறிவிப்புகளும் நடந்தேறின.

**சமஸ்கிருதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும் சில விவரங்கள் பின்வருமாறு :-**

சமஸ்கிருத கல்விக்கான நிதி ஒதுக்கீடு 1996-97-இல் ரூ. 1.45 கோடி என்ற நிலையிலிருந்து. 1999 ஆண்டில் ரூ. 10 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

* தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றமானது (NCERT) அண்மையில் தான் வெளியிட்ட ஆவணம் ஒன்றில் 3ஆம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை சமஸ்கிதருத்தை கட்டாய பாடமாக்கவேண்டும் என குறிப்பிட்டுள்ளது.
* டெல்லியில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத் தில் (IIT) நமஸ்கிருத படிப்பு கருவகம் (SANSKP IT STUDY CELL) ஒன்று அமைக்கப்பட உள்ளது.
* பள்ளி கல்வி மைய வாரியத்தின் மேனிலை பள்ளி மட்டத்தில் விருப்பப் பாடமாக சமஸ்கிருதம் ஆக்கப் படுகிறது.

அத்துடன், முதுகலை பட்ட வகுப்பில் சோதிடம், கைரேகம், வாஸ்து சாஸ்திரம் முதலான துறைகள் புதிதாக திறக்கப்படுகின்றன.

அனைத்திற்கும் மேலாக, சமஸ்கிருத பல்கலைக்கழ கங்களும் கல்வி நிறுவனங்களில் சமஸ்கிருத துறைகளும் அமைக்கப்படுகின்றன.

இறுதியாக, பூனை பையிலிருந்து வந்தற்போன்று, இந்திய மொழிகளுக்கான பொதுவான வரிவடிவத்தை கொண்டு வரவும் அதை கம்ப்யூட்டர் மூலம் சமஸ்கிருதம் வாயிலாக செய்ய மென்பொருள் தயாரிக்கப்படுகிறது. இது இந்தியாவின் பிற மொழிகளை அழிக்கின்ற செயல்.

**போற்றிப் பாதுகாக்கப்படும் சமஸ்கிருதத்தின் புனிதம் (!)**

சென்ற ஆண்டு நவம்பரில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றத்தின் சார்பில் வெளிவந்த 'தேசிய பள்ளிக் கல்வி பாடத்திட்டம்' என்ற ஆவணத்தில் சமஸ் கிருதம் தான் மிகவும் அறிவியல் பூர்வமான மொழியாக கட்டமைக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முரண்பாட்டு நிலை கொண்ட நம்முடைய நவீன சமுகத்தில் மதிப்பீட்டு மறுமலர்ச்சியினை கொணர சமஸ்கிருதமும் அதன் இலக்கியம் குறித்த படிப்பும் உதவும் என்று முரளி மனோகர் ஜோஷி (மைய கல்வி அமைச்சர்) கூறுகிறார்.

ஆர்.எஸ்.எஸ், பாஜக பரிவாரங்களும் சமஸ் கிருதத்தை உயர்த்திப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. சமஸ்கிருதத்தையும் இந்திய, இந்து பண்பாட்டையும் சமப்படுத்தி பேசப்படுகிறது.

உண்மையில், சமஸ்கிருதம் அந்த அளவிற்கு உயர்ந்த புனிதமான மொழியா என்பதை அறிய வேண்டுமெனில் அதனுடைய சுருக்கமான வரலாற்றை பார்ப்போம்.

**சமஸ்கிருதம் – தேவ பாஷையா? சோம்பேறிகளின் பாஷையா?**

சமஸ்கிருதம் கடவுளின் மொழி என்று பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆகவே அதனை கேள்வி கேட்கவோ அம்மொழியில் ஆக்கப்பட்டுள்ளவற்றிலுள்ள நச்சு கருத்துக் களை எதிர்க்கவோ அம்மொழியினை கற்பதில் ஏகபோகத்தை அனுபவித்து வருகின்ற பார்ப்பனர்களை எதிர்க்கவோ அனுமதி இல்லை.

இன்றைய சமஸ்கிருத மொழியானது குப்த வம்சம் வட இந்தியாவில் ஆட்சி செய்த காலகட்டத்தில் தரப்படுத் தப்பட்டது. (Standardised)

அக்கால கட்டத்தை தான் நம் பாடபுத்தகங்கள் உட்பட பிற்போக்கு சக்திகள் அனைத்தும் 'பொற்காலம்' (!) என்று புளகாங்கிதம் அடைகின்றன.

அன்றிலிருந்து இன்ற வரை அத்தகைய தரப்படுத் தப்பட்ட சமஸ்கிருத மொழியினை பார்ப்பனீயவாதிகள் தூக்கிப்பிடித்து வருகின்றனர்.

இன்று, இந்திய உழைக்கும் மக்களின் விடுதலைக்கு தடையாக இருக்கின்ற பிற்போக்கு நிலவுடமை உற்பத்தி



படிப்பகம்

www.padippakam.com

முறையும் அதன் அங்கங்களாக இருந்து சமூகத்தை ஆட்டிப்படைக்கும் வர்க்க வேறுபாடு, சாதி, பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கைகள் போன்றவையும் 'பொற்காலம்' (!) என்று பிம்பம் செய்யப்படுகின்ற அக்காலக் கட்டத்தில்தான் இக்காரணிகளும் நிறுவனமய மாகி உச்சத்தை அடைந்தது. எனவே தான், அக்காலக் கட்டத்தை பொற்காலம் என பிற்போக்கு பார்ப்பனீய சக்திகள் ஊளையிடுகின்றன.

தமிழக வரலாற்றிலும் கூட 'பொற்காலம்' என்று சித்தரிக்கப்படுகின்ற பிற்காலச் சோழர் காலகட்டத்தில் குறிப்பாக இராஜராஜ சோழன் மற்றும் இராஜேந்திரச் சோழன் ஆண்ட காலகட்டத்தில்தான் நிலவுடமையும் அதன் அடிநாதமான சாதியமும் வேரூன்றியது. பார்ப்பனீயம் அதன் சிகரத்தை அடைந்தது. தமிழில் சமஸ்கிருதம் ஊடுருவி அதை சின்னாபின்னமாது.

அக்காலக்கட்டம் முதற்கொண்டு பிரிட்டிஷார் வருகை வரை சமஸ்கிருதத்தை பார்ப்பனர்கள் உட்பட அரச குடும்பத்தினர் மட்டுமே பயில இயலும், சமூகத்தின் இதர பிரிவினர் அதை பயில இயலாது. மீறினால் கடுமையாக தண்டிக்கப்படவோ கொல்லப்படவோ செய்வர். இதுதான் பார்ப்பனீய சனாதன தர்ம/பாரம்பரிய பழம்பெருமைமிக்க இந்து மத விதி.

சமஸ்கிருதத்தை பயிலுவதை ஒரு குறிப்பிட்ட சிறு பிரிவினர் ஏகபோக உரிமையாக்கிக் கொள்வதன் வாயிலாக அறிவையும் அதிகாரத்தையும் ஏகபோகமாக்கிக் கொள்ள இயலும் என கருதினர். அதாவது, அதிகாரத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் ஒரு சிறு கும்பல் சுகபோக வாழ்க்கை நடத்தி வந்தது,

அத்தகைய கும்பல் தங்களின் சோம்பேறித்தனமான வாழ்க்கையினை மூடி மறைக்க சமஸ்கிருதத்தை தேவ பாஷையென்றும் அதை கற்க தங்களுக்கு மட்டுமே உரிமை இருக்கிறது என்றும் பசப்பி வந்தது.

**கோவில் கருவறைக்குள் முடங்கிப்போன சமஸ்கிருதம்**

தேவ பாஷை என்ற பெயரோடு ஆதிக்கம் செலுத்தி வந்த சமஸ்கிருதம் வழக்கொழிந்து மதச் சடங்குகளுக்கும் கோவில் கருவறைக்குமான மொழியாக பிரிட்டிஷார் ஆட்சியில் மாறிப்போனது.

வரி வடிவம் இன்றியும் ஆட்சியாளர்களின் ஆதரவும் இன்றி எண்ணற்ற மொழிகள் இந்தியாவில் பல கோடி மக்களால் இன்றும் அன்றாடம் பேசப்பட்டு நடைமுறையில் வாழ்ந்து கொண்டிருக்கையில் சமஸ்கிருதம் பேசுவோரை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

காரணம் – உழைக்கும் மக்கள் பிற மொழிகள் பேசுவதாலும் உழைக்காத சுரண்டல் கும்பலே அதைப்பேசி வந்ததும் ஆகும்.

உழைப்பில் ஈடுபடுவோர் பேசாத மொழி உயிர் வாழாது. அதே நிலைமை சமஸ்கிருதத்திற்கும் ஏற்பட்டு உள்ளது.

தரப்படுத்தப்பட்ட சமஸ்கிருத மொழியின் இலக்கியத்தில் சமூக வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்ற கருத்துக்களே கணிசமாக மேலோங்கி நிற்கின்றன. அம்மொழியினை கட்டுக்குள் வைத்திருப்போர் சமூக வளர்ச்சிக்கு எதிரானவர்களே.

இங்ஙனம், உழைப்பாளி மக்களால் சமஸ்கிருதம் பேசப்படாததாலும் பேசுவோர் சமூக வளர்ச்சியினை தடுக்கின்ற பிற்போக்கு சக்திகளாக இருப்பதாலும் மக்களை ஏய்க்கின்ற கோவில் கருவறை மொழியாகவும் சடங்கு மொழியாகவும் அது சிதைந்து போய்விட்டது.

**உயிர்ப்பிக்கப்படும் சமஸ்கிருதமும் நோக்கமும்**

கடந்த 50 ஆண்டு கால போலி சுதந்திர ஆட்சியில் மக்களின் அடிப்படை சிக்கல்கள் தீர்க்கப்படாததால் காஷ்மீர், அசாம், வடகிழக்கு போன்ற பகுதிகளில் தனிநாடு கோரியும் ஆந்திரா, பீகார், தண்டகாரண்யா போன்ற பகுதிகளில் நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையில் உழைக்கும் மக்களின் ஆட்சியமைக்கவும் ஆயுதப் போராட்டங்கள் கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

அப்போராட்டங்களை மழுங்கடிக்கவும் திசைதிருப்பவும் பாஜக கும்பலால் இந்துத்துவ அரசியல் முன்வைக்கப்படுகிறது. அதை பண்பாட்டு தளத்தில் கொண்டு செல்ல தொலைக்காட்சி ஊடகத்தில் இராமாயணம், மகாபாரதம், சாணக்யா, கிருஷ்ணா போன்ற தொடர்கள் ஒளிபரப்பட்டது. விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் அந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

மறுபுறத்தில், பண்பாட்டு தளத்தில் இந்துத்துவாவை முன்கொண்டு சென்றதால் அரசியல் தளத்தில் இந்து – முஸ்லீம் கலவரத்தை சுலபமாக நடத்த இயன்றது. இதன் உச்சகட்டமாக பாபர் மசூதி இடிக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் பயன்படுத்தி பல மாநிலங்களிலும் ஆட்சியை பிடித்த இந்துமதவெறிக்கும்பல் கடந்த 3 ஆண்டுகளாக மையத்திலும் ஆட்சியில் அமர்ந்து உள்ளது.

ஆட்சியில் இருப்பதை சாதகமாக்கி 'இந்து ராஷ்ரா' – வை முழுமையாக கொண்டுவர கல்வித்துறையினை கையிலெடுத்து இந்துத்துவா கருத்துக்களை பரப்ப சமஸ்கிருதத்தை கட்டாய பாடமாகவும் நாடெங்கும் சமஸ்கிருத வழிக் கல்வியை கொண்டுவரவும் கல்வித் துறையில் சமஸ்கிருதமயமாக்கல் நடைபெறுகிறது. சாராம்சத்தில், அது காவிமயமாக்கம் ஆகும்.

**- சர்ச்சில்**



படிப்பகம்

www.padippakam.com

# பங்களாதேஷிடம் 16 இராணுவ வீரர்களை பலி கொடுத்த இந்திய விரிவாதிக்க அரசு

கடந்த ஏப்.18 அன்று பங்களாதேஷ் நாட்டு இராணுவத்தினரால் இந்திய எல்லைப் பாதுகாப்பு படையின் 16 விரர்கள் கொல்லப்பட்டனர்.

உடன், வழக்கம்போல் இந்திய தேசிய வெறியினை கிளப்பி பங்களாதேஷிற்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்றும் பங்களாதேஷை பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்றும் இறந்த இராஸவ வீரர்களின் உடல்களை காட்டி இந்திய விரிவாதிக்கத்திற்கு தூபம் போடப்பட்டது.

கார்கில் சிக்கலில் பாகிஸ்தான் ஊடுருவல் என்று பசப்பி காஷ்மீர் விடுதலை போராட்டத்தை நசுக்க இந்தியா படையெடுத்ததை மறைத்தாற்போன்று இச்சிக்கலிலும் இந்திய விரிவாதிக்க இராணுவ ஊடுருவல் பங்களா தேஷிக்குள் நடைபெறுவது மறைக்கப்படுகிறது.

தெற்காசியாவில் இந்திய விரிவாதிக்கத்தை ஏற்காத பாகிஸ்தானுக்கு பாடம் கற்பிக்க அதனை இரண்டாக உடைக்கும் நோக்கத்துடனும் புரட்சியாளர்களின் தலைமையில் பங்களாதேஷ் விடுதலையடைந்துவிடக் கூடாதென்ற தனது சுரண்டல் வர்க்க நலனிற்காகவும் இந்திய இராணுவமானது 1971-இல் பங்களாதேஷ் பகுதியில் நுழைந்தது

பின்னர், பங்களாதேஷின் சில பகுதிகளை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து அன்றிலிருந்து அவற்றை ஆக்கிரமித்துதான் வருகிறது இந்திய விரிவாதிக்க அரசு.

அப்பகுதிகள் சம்பந்தமாக 1974 மே மாதத்தில் நாட்டின் எல்லை குறித்து ஒரு ஒப்பந்தம் இந்தியா மற்றும் பங்களாதேஷ் இடையே கையெழுத்தானது. அதன்படி, இந்தியா மற்றும் பங்களாதேஷ் இடையே கையெழுத்தானது. அதன்படி, இந்தியாவின் ஆளுகைக்கு உட்பட்ட சில நிலப்பகுதிகள் பங்களாதேஷிக்கும் பங்களாதேஷின் ஆளுகைக்கு உட்பட்ட சில நிலப்பகுதிகள் இந்தியாவிற்கும் மாற்றிக்கொள்ளவேண்டும். இது 1974 டிசம்பருக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் இரு தரப்பு முடிவு.

இந்த ஒப்பந்தத்திற்கு பங்களாதேஷ் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துவிட்ட போதிலும் இந்தியா நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறவில்லை.

எல்லையின் சில பகுதிகள் இன்னமும் திட்டவட்டமாக வரையறுக்காததால் நாடாளுமன்ற ஒப்புதலை பெற இயலாது என இந்திய அரசாங்கம் கூறி வருகிறது.

எல்லையை திட்டவட்டமாக வரையறுக்க விடாமல் தொழில்நுட்ப காரணங்களையும் சட்டச் சிக்கல்களையும் காட்டி இந்திய அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை அமுல் படுத்தாமல் கடந்த 25 ஆண்டுகளாக பங்களாதேஷ் அரசாங்கத்தை ஏமாற்றி வருகிறது.

ஆனால், இந்திய அர சாங்கத்தின் உண்மை நோக் கத்தை எல்லை பாது காப்பு படையின் முன்னாள் தலைவர் ஒருவர் கூறிவிட்டார். அதாவது, பாதுகாப்பு காரணங் களுக்காக நிலப்பகுதிகள் பலவற்றை பங்களா தேஷிக்கு மாற்றமுடியாது என்றும் அது குறித்து பேச்சுவார்த்தை கூடாது என்று அவர் கூறுகிறார்.



சம்பவங்கள் நடைபெற்ற இந்தியா– பங்களாதேஷ் எல்லை.

பங்களாதேஷ் அரசாங்கம் ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துமாறு இந்திய அரசாங்கத்தை பலமுறை கேட்டுக்கொண்ருப்பினும் அது கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது.

இந்நிலையில், இந்தியா – பங்களாதேஷ் எல்லையில் உள்ள பிர்டிவா (இது, இந்தியாவின் மேகாலயா மாநிலத்தின் டாவ்கி என்ற பகுதியி ல் உள்ளது.) என்ற கிராமத்துடன் இணைக்கும் சாலை ஒன்று இந்தியா அமைக்கத்தொடங்கியுள்ளது. இச்செயல், எல்லைக் கோட்டிற்கு 150 மீட்டருக்கு உள்ளாக எத்தகைய கட்டுமானமும் இருக்கக்கூடாது என்ற சர்வதேச சட்டத்திற்கு எதிரானதாகும்.

அது மட்டுமன்றி, கடந்த 2 ஆண்டுகளாக எல்லைப் பகுதியில் இந்திய இராணுவத்தின் ரோந்து செய்ற்பாடானது ஆக்கிரமிப்பு தன்மையில் உள்ளது. விளைவாக, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் பங்களாதேஷ் இராஸவத்தினர் இருவர் உட்பட 45 பேர் பங்களாதேஷ் தரப்பிலும் இந்திய தரப்பில் பத்து பேரும் இறந்துள்ளனர்.

பங்களாதேஷ் அரசாங்கம் பல முறை இச் சம்பவங்களுக்காக கண்டனங்களை இந்திய அரசாங்கத்திடம் தெரிவித்தபோதிலும் அவை செவிடன் காதில் ஊதிய சங்காக ஆனது,

இதுபோன்ற நீண்ட கால காரணங்களாலும் பிர்டிவா கிராமத்தில் சாலை அமைக்கத்தொடங்கியதாலும் புறச்சாவடியை (Out Post) இந்திய எல்லை பாதுகாப்பு படை அமைத்ததாலும் பங்களாதேஷ் இராஸவம் அக்கிராமத்தினை கைப்பற்றியது.

இதற்கு பதிலடியாக, இந்திய எல்லைப் பாதுகாப்பு

(11ஆம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

**(24ம் பக்கத்தின் தொடர்ச்சி)**

'கலம்' என்ற ஆங்கில இதழை பல ஆண்டுகள் வெளிக்கொணர்ந்ததில் பெரும் பங்காற்றினார்.

பிப்ரவரி 1996–ல் AIPRF (ALL INDIA PEOPLES RESISTANCE FORUM) என்ற அமைப்பின் சார்பில் 'தேசிய இனச் சிக்கல்' மீதான சர்வதேச கருத்தரங்கம் டெல்லியில் நடைபெற்றபோது அதை வெற்றிகரமாக்கியதில் இவரின் பங்கு மகத்தானது.

தோழரும் அவரின் விடுதி அறையும் டெல்லியின் புரட்சிகர மற்றும் தேசிய இனச் செயல்வீரர்களால் எப்போதும் சூழப்பட்டிருந்ததை பலரும் காண முடிந்தது.

அத்தகைய தோழர் புரட்சிகர இயக்கம் முன்னேறிக் கொண்டிருக்கும் ஆந்திரா மற்றும் தண்டகாரண்யா பகுதிகளில் 1996 முதற்கொண்டு சென்ற ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இறக்கும் வரை தீவிரப் பணியாற்றினார்.

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள விசாகப்பட்டினம் என்ற நகருக்கு 200 கி.மீ. தள்ளி உள்ள போலீஸ் நிலையத்தின் மீது மக்கள் யுத்த கட்சியின் கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலில் பங்கு பெற்ற தோழர் நவீண் போலீசால் கொல்லப்பட்டார்.

ஓர் அறிவுஜீவியின் மகத்தான கடமை –அவன் மக்களுக்காக வாழ்வதும் இறப்பதும் ஆகும்.

இங்கிலாந்தில் பிறந்தாலும் ஸ்பெயின் நாட்டின் பாசிச ஆட்சியாளர்களை எதிர்த்து போரிட்டு 29 வயதிலேயே வீர மரணமடைந்த மாபெரும் மார்ச்சிய அறிவு ஜீவியான கிறிஸ்டோபர் காட்வெல் (CHRISTOPHER CAUDWELL) மற்றும் உழைக்கும் மக்களின் விடுதலைக்காய் போராடி ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீகாகுளம் பகுதியில் வீரமரணமடைந்த படிப்பில் தங்கமெடல் வாங்கிய தோழர் சாகந்தி பாஸ்கர்ராவ் (CHAGANTI BHASKAR RAO) ஆகியோரின் அணிவரிசையில் எம்.ஏ., எம்.பில் பட்டம் பெற்ற தோழர் நவீண் இணைந்துவிட்டார்.

**- ஜனார்த்தன்**

# நிமிடத்துக்கு 12 ஆயிரம் ரூபாய்க்கு டி, பிஸ்கட் சாப்பிடும் பாஜக மந்திரிகள்

பாஜக ஆளும் உத்திரப் பிரதேச சட்டசபையில் தெரிவிக்கப்பட்ட விபரம் : ஏப்ரல் 2000 முதல் டிசம்பர் 2000 வரை 9 மாதங்களில் மந்திரிகளுக்கான டீ – பிஸ்கட் செலவு மட்டும் ரூ. 4.08 கோடி. 15 நிமிடத்துக்கு சராசரி 1.7. லட்சம் ஆகிறது. அதாவது நிமிடத்துக்கு 12 ஆயிரம் ரூபாய்க்கு மந்திரிகள் டீ, பிஸ்கட்டை சாப்பிடுகிறார்கள்.

இதில் 12 அமைச்சர்களுக்கு மட்டும் செலவு ரூ. 10 லட்சத்திற்கு மேல், இவ்வளவு தொகையா என வியப்பவர்களுக்கு மேலும் ஒரு விபரம்.

மந்திரிகளுக்கான செலவிற்காக ஒதுக்கீடு 25, 18 கோடி ரூபாய். இது 30 கோடியை தாண்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. அவர்கள் சாப்பிடுவது மேரி கோல்டு பிஸ்கட்டா அல்லது கோல்டு (தங்கம்) பிஸ்கட்டுகளா?

**மாதிரிக்கு 12 மந்திரிகள் பிஸ்கட் செலவு பட்டியல் மட்டும் கீழே தரப்படுகிறது.**

| மந்திரியின் பெயர் | இலாகா | டி–பிஸ்கட் செலவு |
|---|---|---|
| சர்தார் சிங் | குடும்பக்கட்டுப்பாடு குழந்தை நலம் | 14,63,000 |
| சுக்பால் பாண்டே | போக்குவரத்து | 13,38,500 |
| ராகேஷ் தியாகி | கூட்டுறவு | 10,04,000 |
| வன்ஷ் நாராயண்சிங் படேல் | உணவு மற்றும் சிவில் சப்ளை | 18,20,800 |
| ராம் ஆஸ்ரே பாஸ்வான் | நீர்ப்பாசனம் | 24,42,000 |
| தல்பீர் சிங் | கரும்பு சாகுபடி முன்னேற்றம் | 17,70,470 |
| ராம்பால் ராஜ்வன்ஷி | சுற்றுச்சூழல் | 16,50,900 |
| பேஹாரிலால் ஆர்யா | உணவு மற்றும் சிவில் சப்ளை | 12,47,000 |
| வினய்குமார் பாண்டே | சிறைச்சாலை | 18,52,025 |
| வேத் பிரகாஷ் | ஹோம் கார்டு, பென்ஷன் மற்றும் சிவில் பாதுகாப்பு | 10,75,000 |
| அமர்மணி திரிபாதி | தொழில் முதலீடு மற்றும் தொழில் வரி | 14,97,200 |
| முன்னாலால் மௌரியா | உணவு மற்றும் சிவில் சப்ளை | 11,03,880 |

**நன்றி – அவுட்லுக் (ஆங்கில இதழ்)**



படிப்பகம்

www.padippakam.com



வடகிழக்கு டெல்லியின் சஹாராதாரா தொழிற்பேட்டையின் முதன்மை சந்திப்பின் சாலைமறியலில் தொழிலாளிகள்

(23ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாங்கள் எதிர்பார்த்த அளவு இந்தியாவில் இல்லை என்று புலம்புகின்ற வேளையில் அதை மேலும் பாதிக்கின்ற வகையில் தனியார் வாகன போக்குவரத்தை கட்டுப்படுத்தினால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மேலும் மேற்குறிப்பிட்ட சிறு மற்றும் குறுந்தொழிற்சாலைகளை விட அதிகமாக சுற்றுச்சூழல் மாசுபாட்டை விளைவிக்கும் தரகு பெரு முதலாளிய மற்றும் ஏகாதிபத்திய தொழிற்சாலைகளை உச்ச நீதி மன்றம் கண்டுகொள்ளவில்லை. ஏனெனில், மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் தான் அதே உற்பத்தியில் ஏகாதிபத்திய – தரகு பெரு முதலாளிய தொழிற்நிறுவனங்கள் ஈடுபடவும் ஏதுவாகும்.

அனைத்திற்கும், மேலாக உலக வணிக அமைப்பில் இந்தியா இணைந்து விட்டதால் அதன்படி ஏப்ரல் மாதம் முதற்கொண்டு அன்னிய பொருட்கள் மேலும் அதிமாகக் குவியப்போகிறது. அதற்கும் ஏதுவாக உச்சநீதிமன்ற உத்திரவு பயன்படும்.

உண்மையில், சுற்றுச்சூழலை காக்க நீதிமன்றங்களுக்கு அக்கறையில்லை. இலாபமொன்றையே குறிக்கோளாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் புதிய பொருளாதார கொள்கையினால் நடைபெறும் உற்பத்தியில் கணிசமானது சமூகத்திற்கு தேவையில்லாததே. அதில் ஈடுபடும் தொழிற்சாலைகளாலும் அவை உற்பத்தி செய்யும் விளைபொருட்கள் பயன்படுத்தப்படுவதாலும் சுற்றுச்சூழல் அதிகம் கெடுகிறது.

இந்த அம்சத்திற்குள் நீதிமன்றங்கள் நுழைவது கூட இல்லை. ஏகாதிபத்திய மற்றும் தரகு பெரு முதலாளிய தொழிற்நிறுவனங்களுக்கு சாதகமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற அம்சத்தை ஆயுதமாக பயன்படுத்தி தொழிலாளிகளின் வாழ்வுரிமையை பறித்து சிறு மற்றும் குறுந்தொழிற்சாலைகளை மூடவைத்து தங்களின் எசமானர்களுக்கு சேவை செய்கின்றன. ஆட்சியாளர்களும் நீதிமன்றங்களும் இப்பிரச்சினையில் கூட்டாளிகளாகதான் உள்ளனர்.

சுற்றுச்சூழல் விதிகளை கணக்கில் கொண்டு சமூகத்திற்கு தேவையான உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்கொள்கைதான் சுற்றுப்புறச்சூழலை பாதுகாக்கும்.

பின்னர், விரைவு அதிரடிப்படை (RAPID ACTION FORCE) வரவழைக்கப்பட்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் இரு தொழிலாளர்கள் இறந்தனர்.

முழு அடைப்பு நடைபெற்ற நாளுக்கு பின்னரும் ஆங்காங்கே சில நாட்கள் போராட்டங்கள் நடைபெற்றன. அவையனைத்தும் ஈவிரக்கமின்றி ஒடுக்கப்பட்டன. மக்கள் வீதிகளுக்கு வருவது முடக்கப்பட்டது. தொழிலாளர்களை ஒன்று சேரவிடாமல் தடுக்கும் வண்ணம் பல்வேறு தொழிற்பேட்டை நுழைவாயில்களில் போலீசார் குவிக்கப்பட்டனர். ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.

இனி, இத்தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் தான் டில்லியின் சுற்றுச்சூழலை மாசுபடுத்துகிறதா என்பதைப் பார்ப்போம்.

உண்மையில் டில்லியில் உழைக்காத கும்பலால் அதிகம் பயன்படுத்தப்படும் கார், விமானம் போன்ற வாகனங்களிலிருந்து வெளிவரும் புகைதான் டில்லியின் சுற்றுச்சூழல் மாசுபாட்டில் மூன்றில் இரண்டு பங்கு வகிக்கிறது. மாறாக, உச்சநீதிமன்றம் கூறுவது போல் அல்ல.

பொதுவாகன போக்குவரத்தினை அதிகப்படுத்தி தனியார் வாகன போக்குவரத்தை தீவிரமாக மட்டுப்படுத்தினால் டில்லியின் சுற்றுச்சூழல் மாசுபடாது.

அதைச் செய்ய நீதிமன்றங்களும் அதிகாரவர்க்கமும் தயாரில்லை. ஏனெனில், ஏகாதிபத்திய மற்றும் தரகு பெரு முதலாளிகளின் வாகன தொழிற்சாலை முதலாளிகளுக்கு அது எதிரானது. ஏற்கனவே, மோட்டார் வாகன தயாரிப்பில் உள்ள ஏகாதிபத்திய முதலாளிகள் மோட்டார் வாகன விற்பனை

– விஜய்

**ஓர் அறிவிப்பு :**

இந்த இதழிற்கு முந்தைய இரு இதழ்களில் தொடராக வெளிவந்த "47க்கு பிந்தைய உழவர் போராட்டங்கள்" என்ற கட்டுரையின் தொடர்ச்சியை இவ்விதழில் தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியிட இயலவில்லை. அடுத்த இதழில் தவறாமல் வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# டில்லியைக் குலுக்கிய தொழிலாளர் போராட்டம்

நாடாளுமன்ற பன்றிகளும் சோம்பேறி செல்வச் சீமான்களும் திமிர் பிடித்த அதிகார வர்க்கத்தினரும் கோலோச்சும் டில்லி நகரம் அன்று தொழிலாளர்களின் கோபத்தீயினால் எரிந்தது.

ஆம், சென்ற ஆண்டு, நவ.20 அன்று இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வீதிகளிலும் சாலைகளிலும் கூடினர். 'சுற்றுச்சூழல் கெடுகிறது' என்ற பெயரில் இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறுந்தொழிற் சாலைகளை மூட உத்திரவிட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து விடுக்கப்பட்ட அறைகூவலை ஒட்டி முழு அடைப்பு போராட்டத்திற்குதான் அவ்வாறு அணிசேர்ந் தனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் ஒன்றுதிரண்டனர்.

நிலவும் தொழிலாளர் விரோத அரசாங்கத்தின் சின்னங்களான அரசு கட்டிடங்கள், வாகனங்கள், போலீஸ் சாவடிகள், அரசு பேருந்துகள் ஆகியவை தொழிலாளர்களின் இலக்குகளாயின. அவை அனைத்தும் அவற்றை உருவாக்குபவர்களாலேயே தாக்கப்பட்டன. எரிக்கப்பட்டன. ஏன்? அவை அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. மாறாக, அவை அவர்களின் வாழ்வை நாசமாக்கும் சுரண்டல் கும்பலை பாதுகாக்கும் ஈனப் பணியினையே செய்து வருகின்றன.

ஆண்டாண்டு காலமாக சேர்த்து வைத்திருந்த கோபத்தினை போலீஸின் மேல் தொழிலாளர்கள் காட்டினர். கற்களை பயன்படுத்தி போலீசுடன் நேருக்குநேர் மோதி அக்கும்பலை ஓட ஓட விரட்டியடித்தனர். பல போலீசார் தங்களுடைய சீருடையை கழற்றிவிட்டு மக்களின் கோபத்தீயிலிருந்து தப்பிக்க முனைந்தனர்.

பயணச்சீட்டு என்ற பெயரில் சட்டரீதியான வழிப்பறியில் ஈடுபடும் பேருந்துகள் அவர்களின் (தொழிலாளர்கள்) இலக்குகளாயின. சென்ற முறை பயணச்சீட்டு விலை உயர்வு அறிவிக்கப்பட்டபோது அடங்கிக் கிடந்த டில்லியின் உழைக்கும் மக்கள் அன்று அவர்களின் வீராவேசத்தைக் காட்டினர். 12 பேருந்துகள் முழுமையாக எரிக்கப்பட்டு எண்பதுக்கும் மேற்பட்டவை அடித்து நொறுக்கப்பட்டன.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப் படுத்தும் வண்ணம் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு சீல் வைக்கத் தொடங்கினர். மேலும் அத்தொழிற்சாலைகளுக்கான மின்சாரம் மற்றும் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இவற்றை எதிர்த்து தொழிலாளர்கள் இரு நாட்கள் அமைதியான முறையில் பல்வேறு இடங்களில் போக்குவரத்தினை மறித்தனர். அவற்றின் இயல்பான அடுத்த கட்ட போராட்டம் தான் நவ.20–இல் நடந்தது.

அத்துடன் அதே நாளில் தொழிற்சாலைகளுக்கு சீல் வைக்க முற்பட்ட அதிகாரிகள் முற்றுகையிடப்பட்டு தாக்கப்பட்டு அவ்விடத்தை



உச்சநீதி மன்றத்தின் உத்தரவை முன்னிட்டு தொழிற்சாலைகள் மூடப்பட்டதை கண்டித்து போராடும் தொழிலாளிகள்

விட்டு ஓடுமாறு நிர்பந்திக்கப்பட்டனர்.

தொழிலாளர்கள் மட்டுமின்றி அத்தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள், அத்தொழிற்சாலைகளை சார்ந்துள்ள சிறு கடை வியாபாரிகள் போன்றோரும் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். டில்லியின் வடகிழக்குப் பகுதியில் இத்தொழிற்சாலைகள் அதிகம் உள்ளதால் போராட்டம் அங்குதான் தீவிரமாக நடைபெற்றது.

மைய அரசாங்கத்தின் தொலைபேசி நிறுவனத்தின் அலுவலகம் எரிக்கப்பட்டது.

மொத்தத்தில் 12 பேருந்துகளும், போலீசின் 7 மோட்டார் சைக்கிள்களும், செஷன்ஸ் நீதிபதியின் கார் ஒன்றும் அரசாங்க வாகனங்கள் இரண்டும், தபால் துறையின் வேன் ஒன்றும், இரயில்வே எஞ்சின் ஒன்றும், அரசாங்கத்தின் சாராய வேன் ஒன்றும், எரிக்கப்பட்டன.

டில்லி தொழிற்துறை அமைச்சரின் வீடும் கற்களால் தாக்கப்பட்டது. மக்கள் தங்களின் கைகளுக்கு கிடைத்தவற்றை ஆயுதமாகக் கொண்டு போலீசுடன் நேருக்குநேர் பல இடங்களில் மோதினர். ஆங்காங்கே டயர்கள் எரிக்கப்பட்டும் தடுப்புகளைக் கொண்டும் சாலைகள் தடுக்கப்பட்டன.

சந்துக்கு சந்து, வீதிக்கு வீதி, சாலைக்கு சாலை இப்போர் நடைபெற்றது. குறுஞ்சந்துகளையும் சிறு தெருக்களையும் பாதுகாப்பு அரண்களாக கொண்டு போலீசை மக்கள் தாக்கினர்.

மத வேறுபாடின்றி அனைத்து மதங்களை சேர்ந்த தொழிலாளிகளும் களத்தில் குதித்தனர். இந்து மத வெறியினை ஊட்டுகின்ற பா.ஜ.க. கும்பலின் செல்வாக்கு மிகுந்த டில்லியில் உழைப்பாளிகள் மத பாகுபாடுகளை தூக்கியெறிந்து. வர்க்க ஒற்றுமையுடன் போராடினர்.

(22ஆம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் நவீனின் தியாகத்தை உயர்த்திப் பிடிப்போம்!

இன்றைய சமூகத்தின் போட்டி நிறைந்த சூழலில், பல பட்டங்கள் பெற்றும் வேலை கிடைக்காமல் அல்லலுறும் நிலையிலும் மேலும் மேலும் பட்டங்களையும் பட்டயங்களையும் சான்றிதழ்களையும் பெற்றாவது வேலை கிடைத்துவிடாதா என எதிர்பார்த்து அலைகின்றனர் பல இளைஞர்களும் மாணவர்களும். இந்நிலையில் பெற்ற பட்டங்களை தூக்கி எறிந்துவிட்டு உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து போராடுவதும் அவர்களின் விடுதலைக் காக தன் வாழ்க்கையை அர்ப்பணிப்பதும் உயிரை தியாகம் செய்வதும் ஒப்பீட்டளவில் மிகச் சிலரே. அவர்களில் தோழர் நவீனும் ஒருவர்.



35 வயதே நிரம்பி தியாகியான தோழர். நவீண் ஆந்திர பிரதேச மாநிலத்தில் உள்ள கிருஷ்ணா மாவட்டத்தில் நடுத்தர விவசாய குடும்பத்தில் பிறந்தவர். அவர் தன்னுடைய பட்டப்படிப்பை ஹைதராபாத்திலும் முது கலையில் சமூகவியல் படிப்பை இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மீரட் பல்கலைக்கழத்தில் 1986-இல் படிப்பை முடித்தார். 1988–இல் டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் எம்.பில்., படிப்பினை முடித்தார். 1988–ல் அதே கல்வி நிறுவனத்தில் பிஎச்.டி படிப்பைத் தொடங்கினார். இறுதியாக 1992–இல் அதை இடையில் நிறுத்திவிட்டு 1993–.இல் டெல்லி பல்கலைக்கழகத்தில் சட்ட வகுப்பில் இணைந்தார்.

மீரட்டில் மாணவராக இருந்தபோது மார்க்சியத்தின் பால் ஈர்க்கப்பட்ட அவர் இந்திய மாணவர் சங்கத்தில் இணைந்தார்.

பின் அதனுடைய அரசியலின் மீது அதிருப்தியுற்று அதிலிருந்து விலகினார்.

1988 இல் டெல்லி முற்போக்கு மாணவர் அமைப்பில் இணைந்த அவர் அவ்வமைப்பினை நன்றாக செயல்படுத்த வைத்ததில் முக்கியப் பங்காற்றினார்.

அப்பொழுது முதல் 1996 வரையில் டெல்லியில் புரட்சிகர அமைப்பை கட்டுவதற்கு செயலூக்கமுடன் பணியாற்றினார். டெல்லியில் உள்ள கல்வி நிறுவனங்கள் எவற்றிலாவது போராட்டம் நடைபெற்றால் அங்கெல்லாம் அவர் இருப்பார்.

திரிபுவாத மாணவர் அமைப்புகளான அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், இந்திய மாணவர் சங்கம், அனைத்திந்திய மாணவர் கழகம் ஆகியவை டெல்லியில் குறிப்பாக ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மார்க்சியத்தின் பெயரால் மாணவர்களை ஏமாற்றி கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் உண்மையான புரட்சிகர அரசியலை மாணவர்களிடையே தைரியமாக கொண்டு சென்றார். அதுமட்டுமின்றி தேசிய இனங்களின் போராட்ட ஆதரவு அரசியலையும் மையும் அங்கு கொண்டு சென்றார். தேசிய இனப்போராட்டம் தீவிரமாக நடைபெற்று கொண்டிருக்கிற காஷ்மீர், அசாம், நாகாலாந்து, மணிப்பூர், திரிபுரா, ஜார்கண்ட், போன்ற பகுதிகளின் மாணவர்கள் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும் டெல்லியின் இதர கல்வி நிறுவனங்களிலும் பயின்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு தெரிந்த கம்யூனிஸ்டு கட்சிகளான சி.பி.ஐ., சி.பி.எம். போன்றவையும் அவைகளின் மாணவர் அமைப்புகளும் அத்தேசிய இனங்களின் போராட்டங்களை எதிர்த்ததோடு அரசு பயங்கரவாதம் கொண்டு ஒடுக்கவும் செய்தன. இந்நிலையில் ஒரு சரியான மார்க்சிய மாணவர் அமைப்பு என்பது இத்தகைய தேசிய இனப்போராட்டங்களை ஆதரிப்பதோடு அவற்றை ஒடுக்குகின்ற அரசு பயங்கரவாதத்தை எதிர்க்கவும் வேண்டும். அதை டெல்லி முற்போக்கு மாணவர் அமைப்பு செய்ததுடன் அதை முன்னின்று தோழர் நவீண் செய்தார். விளைவாய் அவர்களில் பலர் மார்க்சியத்தின் பால் ஆதரவு நிலை எடுத்தும் தங்களின் தேசிய இனப் போராட்டங்களின் மீது உத்வேகமும் கொண்டனர்.

புரட்சிகர அரசியலையும் தேசிய இன ஆதரவு இயக்கங்களையும் இந்தியாவின் விரிவாதிக்க எதிர்ப்பையும் டெல்லியில் உள்ள பரந்துபட்ட மாணவர்கள், அறிவு ஜீவிகள் ஆகியோரிடையே கொண்டு சென்றதில் தோழர் நவீண் முக்கியப் பங்காற்றினார்.

1990-இல் மண்டல் குழு அறிக்கைக்கு எதிராக டெல்லியில் உயர் மற்றும் உயர் நடுத்தர வர்க்க மாணவர்கள் திரண்டபோது மண்டல் குழு அறிக்கையினை ஆதரித்து மாணவர்களிடையே பணியாற்றினார்.

1990-இல் முழுநேரப் புரட்சியாளராக மாறிய அவர் டெல்லியில் முற்போக்கு மாணவர் அமைப்பு மற்றும் ஜனநாயக மாணவர் அமைப்பு ஆகியவற்றை ஒன்றிணைத்ததில் முக்கியப் பங்காற்றினார்.

அனைத்திந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினராக இருந்து அவ்வமைப்பின் சார்பில்

(21ஆம் பக்கம் பார்க்க)



படிப்பகம்